©
தமிழ்நாடு அரசு
2012

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[விலை: ரூ. 15.20 காசு.

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 28] சென்னை, புதன்கிழமை, ஜூலை 18, 2012
ஆடி 3, திருவள்ளுவர் ஆண்டு–2043

## பகுதி IV— பிரிவு 2 இன் இணைப்பு

**தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது, 2012–ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 23–ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது; மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன் மூலம் வெளியிடப்படுகிறது:–**

**சட்ட எண் 9/2012.**

**தமிழ்நாடு மாநிலத்தில் தனித்திறம் வாய்ந்த சட்டக்கல்வியை வழங்குவதற்காக தேசிய சட்டப்பள்ளி ஒன்றை நிறுவியமைப்பதற்கு வகை செய்வதற்கானதொரு சட்டம்.**

சட்டக் கல்வியானது, சமூக, அரசியல் மற்றும் பொருளாதார மாற்றத்திற்கானதொரு கருவியாகும் என்பதாலும்;

எனவே, உலகமயமாதல் மூலம் கொண்டுவரப்படும் சவால்களை எதிர்கொள்வதற்காக, உலகளாவிய காட்சியில் ஏற்பட்டுவரும் சூழ்நிலை மாற்றத்திற்கேற்ப, அதற்கு ஈடுகொடுத்து இணைந்து செல்லும் வகையில் சட்டத்தைக் கற்றல், சட்ட அறிவு பெறுதல், சட்டவழிமுறைகளை அறிந்து கொள்ளுதல், வழக்காடும் திறமை, நீதி நிருவாகத்தில் திறமையைப் பளிச்சிடச் செய்தல் ஆகியவற்றைச் சட்டக்கல்வியின் மூலம் மேம்படுத்திப் பரப்புவதற்கு வகை செய்வதற்காக, இம் மாநிலத்தில் தேசிய அளவிலான நிறுவனமொன்றை அமைத்துருவாக்குவதென மாநில அரசானது முடிவு செய்துள்ளது என்பதாலும்;

இந்தியக் குடியரசின் அறுபத்து மூன்றாம் ஆண்டில், தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

### அத்தியாயம் I.

### முன்னுரை.

**1.** (1) இந்தச் சட்டம், 2012–ஆம் ஆண்டு தமிழ்நாடு தேசிய சட்டப் பள்ளிச் சட்டம் என வழங்கப்பெறும். குறுந்தலைப்பு, அளாவுகை, மற்றும் தொடக்கம்.

(2) இது தமிழ்நாடு மாநிலம் முழுவதையும் அளாவி நிற்கும்.

(3) இது, அரசு அறிவிக்கையின் வாயிலாகக் குறிக்கக் கூடிய அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

பொருள் வரையறைகள்.

**2.** இந்தச் சட்டத்தில் தறுவாய் வேறு பொருள் குறித்தாலன்றி,–

(a) ''கல்வி மன்றம்'' என்றால் இப்பள்ளியின் கல்வி மன்றம் எனப் பொருள்படும்;

(b) ''குறிக்கப்பட்ட தேதி'' என்றால் அரசானது, **1**–ஆம் பிரிவின், **(3)**–ஆம் உட்பிரிவின்படி, அறிவிக்கை வாயிலாகக் குறிக்கக் கூடிய அத்தகைய தேதி எனப் பொருள்படும்;

(c) ''தலைமையாளர்'' என்றால் பொது மன்றத்தின் தலைமையாளர் எனப் பொருள்படும்;

(d) 'வேந்தர்'' என்றால் இப்பள்ளியின் வேந்தர் எனப் பொருள்படும்;

(e) ''செயலாட்சி மன்றம்'' என்றால் இப்பள்ளியின் செயலாட்சி மன்றம் எனப் பொருள்படும்;

(f) ''புலம்'' என்றால் இப்பள்ளியின் புலம் ஒன்று எனப் பொருள்படும்;

(g) ''பொது மன்றம்'' என்றால் இப்பள்ளியின் பொது மன்றம் எனப் பொருள்படும்;

(h) ''அரசு'' என்றால் மாநில அரசு எனப் பொருள்படும்;

(i) ''மாணவர் விடுதி'' என்றால் இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கிணங்க பள்ளியினால் பேணிவரப்படுகிற அல்லது ஏற்பளிக்கப்பட்டுள்ள இப்பள்ளியின் மாணவர்கள் தங்கியிருப்பதற்கான ஓரிடம் எனப் பொருள்படுவதோடு, இந்தச் சட்டத்தின்படி இப்பள்ளியால் ஏற்பளிக்கப்பட்டிருப்பதாகக் கொள்ளப்படும் மாணவர் விடுதியொன்றையும் உள்ளடக்கும்;

(j) ''வகுத்துரைக்கப்பட்ட'' என்றால் ஒழுங்குமுறை விதிகளில் வகுத்துரைக்கப்பட்ட எனப் பொருள்படும்;

(k) ''பதிவாளர்'' என்றால் இப்பள்ளியின் பதிவாளர் எனப் பொருள்படும்;

(l) ''ஒழுங்குமுறை விதிகள்'' என்றால் இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட, இப்பள்ளியின் ஒழுங்குமுறை விதிகள் எனப் பொருள்படும்;

(m) ''பள்ளி'' என்றால் தமிழ்நாடு தேசிய சட்டப் பள்ளி எனப் பொருள்படும்;

(n) ''மாநிலம்'' என்றால் தமிழ்நாடு மாநிலம் எனப் பொருள்படும்;

(o) ''ஆசிரியர்கள்'' என்றால் இப்பள்ளியின் துறைகளிலோ அல்லது ஆய்வகங்களிலோ அல்லது மாணவ விடுதிகளிலோ கற்பிக்கின்ற உதவிப் பேராசிரியர்கள், இணைப் பேராசிரியர்கள், பேராசிரியர்கள், இயக்குநர்கள் அல்லது பிற நபர்கள் மற்றும் நூலகர்கள் மற்றும் ஆசிரியர்களென ஒழுங்குமுறை விதிகளினால் விளம்பப்படக்கூடிய அதே போன்ற பிற நபர்கள் எனப் பொருள்படும்;

(p) ''துணை வேந்தர்'' என்றால் இப்பள்ளியின் துணைவேந்தர் எனப்பொருள்படும்.

## அத்தியாயம் II.

### பள்ளி.

பள்ளியை அமைத்துருவாக்குதல்.

**3.** **(1)** இம்மாநிலத்தில், ''தமிழ்நாடு தேசிய சட்டப் பள்ளி'' என்ற பெயரிலான ஒரு பல்கலைக்கழகம் நிறுவப்படுதல் வேண்டும்.

**(2)** இப்பள்ளியானது, நிலையான தொடர்பாட்டு உரிமையையும் தனித்த ஓர் இலச்சினையையும், இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு உட்பட்டு, சொத்தினை ஈட்டுவதற்கும், வைத்திருப்பதற்கும், ஒப்பந்தம் செய்து கொள்வதற்குமான அதிகாரத்தையும் கொண்டதொரு கூட்டமைப்பாக இருத்தல் வேண்டும் என்பதோடு மேற்சொன்ன பெயரில் வழக்கிடுதலும் வழக்கிடப்படுதலும் வேண்டும்.

(3) இப்பள்ளியின் தலைமையகமானது, திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள, ஸ்ரீரங்கம் வட்டத்தில் அமைந்திருத்தல் வேண்டும்.

பள்ளியின் நோக்கங்கள்.

**4.** சட்டத்தைக் கற்றல், சட்ட அறிவினைப் பெறுதல், சட்ட வழிமுறைகளை அறிந்து கொள்ளுதல், தேசிய வளர்ச்சியில் அவற்றின் பங்கினை மேம்படுத்துதல், சட்டக்கல்வியைப் பரப்புதல், வழக்காடும் திறமை, சட்டமுறைச் சேவைகள், சட்டமியற்றுதல், சட்டச் சீர்திருத்தங்கள் மற்றும் அவை போன்றவை தொடர்பான திறமைகளை வளர்ப்பதன் மூலம் சட்டம் சார்ந்த துறையில் சமுதாயத்திற்குச் சேவை செய்வதற்கானதொரு பொறுப்புணர்வை மாணவரிடமும் ஆராய்ச்சி அறிஞரிடமும் வளர்த்தல், சட்ட அறிவை வளர்ப்பதற்காகவும், சட்டத்தையும் சட்ட வழிமுறைகளையும் சமூக மேம்பாட்டிற்கான திறம்பட்ட கருவிகளாக ஆக்குவதற்காகவும் விரிவுரைகளுக்கும், கருத்தரங்குகளுக்கும், விவாத அரங்குகளுக்கும் மாநாடுகளுக்கும் ஏற்பாடு செய்தல், தேர்வுகள் நடத்துதல் மற்றும் பட்டங்களையும் மற்றும் பிற கல்விச் சிறப்புகளையும் வழங்குதல் மற்றும் இப்பள்ளியின் நோக்கங்கள் அனைத்தையும் அல்லது அவற்றுள் எவற்றையும் எய்துவதற்கு இடை நிகழ்வான, தேவையான அல்லது இணக்கமான அத்தகைய அனைத்துச் செயற்பாடுகளையும் செய்தல் ஆகியன இப்பள்ளியின் நோக்கங்களாக இருக்கும்.

பள்ளியின் அதிகாரங்களும் அலுவல்களும்.

**5.** பள்ளியின் அதிகாரங்களும் அலுவல்களும் பின்வருமாறு:–

(i) இப்பள்ளியின் குறிக்கோள்களை இன்னமும் மேம்படுத்துவதற்குப் பள்ளியையும், தேவைப்படுகிற ஆய்வு, கல்வி மற்றும் போதனைக்கான அத்தகைய மையங்களையும் நிருவகித்தலும் மேலாண்மை செய்தலும்;

(ii) இப்பள்ளி பொருத்தமெனக் கருதக்கூடிய சட்டம் சார்ந்த பட்டறிவு மற்றும் அத்தகைய கற்பதற்கான பிரிவுகளில் போதனைக்கு வகைசெய்தல் மற்றும் சட்டக் கல்வியில் ஆராய்ச்சிக்கும் சட்ட அறிவை மேம்படுத்திப் பரப்புவதற்கும் வகை செய்தல்;

(iii) சொற்பொழிவு வகையில் பள்ளிக்கு வெளியே நிகழ்த்தப்படுகிற கற்பித்தலுக்கும் கல்விச் சேவைகளின் விரிவாக்கத்திற்கும் ஏற்பாடு செய்து அது குறித்த பணிகளை மேற்கொள்ளுதல்;

(iv) இப்பள்ளி தீர்மானிக்கக்கூடிய அத்தகைய நிபந்தனைகளுக்கு உட்பட்டு தேர்வுகளை நடத்தி, பட்டங்கள் அல்லது பிற கல்விச் சிறப்புகள் ஆகியவற்றை வழங்குதல் மற்றும் அவ்வாறான பட்டங்கள் அல்லது பிற கல்வி சிறப்புகள் எவற்றையும் சரியான மற்றும் தகுந்த காரணங்களுக்காகத் திரும்பப் பெற்றுக்கொள்ளுதல் ;

(v) ஒழுங்குமுறை விதிகளில் விதித்துரைக்கப்பட்ட வழிமுறைகளின்படி மதிப்புறு பட்டங்களையோ அல்லது பிற சிறப்புகளையோ வழங்குதல்;

(vi) கட்டணங்களை நிர்ணயித்தலும் கட்டணங்களை கோரிப் பெறுதலும்;

(vii) மாணவர் கூடங்களையும் மாணவர் விடுதிகளையும் நிறுவிப் பேணி நிருவகித்துவருதல் மற்றும் இப்பள்ளியின் மாணவர்களுக்கான தங்குமிடங்களுக்கு ஏற்பிசைவளித்தல் மற்றும் அத்தகைய தங்குமிடம் எதற்கும் வழங்கப்பட்ட ஏற்பிசைவை விலக்கிக் கொள்ளுதல்;

(viii) இப்பள்ளி தன் குறிக்கோள்களை இன்னமும் மேம்படுத்துவதற்குத் தேவையெனக் என கருதுகின்றதும், ஆராய்ச்சிக்கும் பயிற்றுவித்தலுக்குமான அத்தகைய சிறப்பு மையங்கள், தனித்துவப் படிப்பு மையங்கள் அல்லது பிற பிரிவுகளை அமைத்தல்;

(ix) இப்பள்ளியில் மாணவர்கள் தங்குமிடத்தைக் கண்காணித்து கட்டுப்பாடு செய்துவருதல் மற்றும் இப்பள்ளியின் மாணவர்களின் ஒழுங்குக் கட்டுப்பாட்டினை முறைப்படுத்துதல் மற்றும் அவர்களின் உடல் நலத்தை மேம்படுத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்துவருதல்;

(x) மாணவிகளைப் பொறுத்த அளவில் அவர்களுக்கான தங்குமிடம், ஒழுங்குக் கட்டுப்பாடு, கற்பித்தல் ஆகியவற்றைப் பொறுத்த அளவிலான ஏற்பாடுகளைச் செய்துவருதல்;

(xi) கல்விசார், தொழில் நுட்ப, நிருவாக, அலுவலகப் பணிகளுக்கான மற்றும் பிற பதவியிடங்களை உருவாக்கி அவற்றில் நியமனங்களைச் செய்துவருதல்;

(xii) இப்பள்ளியின் பணியாளர்களுக்கிடையே ஒழுங்குக் கட்டுப்பாட்டினை வலியுறுத்தி நடைமுறைப்படுத்தி வருதல் மற்றும் தேவையெனக் கருதப்படக்கூடிய அத்தகைய ஒழுங்குநடவடிக்கைகளை எடுத்தல்;

(xiii) பேராசிரியர் பதவிகள், இணைப் பேராசிரியர் பதவிகள், உதவிப் பேராசிரியர் பதவிகள், விரிவுரையாளர்கள் பதவிகள் மற்றும் இப்பள்ளிக்குத் தேவைப்படும் கற்பிப்பதற்கான, கல்விசார் நிலையிலான அல்லது ஆராய்ச்சிக்கான பிற பதவிகள் எவற்றையும் ஏற்படுத்துதல்;

(xiv) இப்பள்ளியின் பேராசிரியர்களாக, இணைப் பேராசிரியர்களாக, உதவிப் பேராசிரியர்களாக, விரிவுரையாளர்களாக அல்லது ஆசிரியர்களாக மற்றும் ஆராய்ச்சியாளர்களாக பிறவாறு நபர்களை நியமித்தல்;

(xv) பட்டதாரி உதவித்தொகைகள், படிப்புதவித் தொகைகள், பரிசுகள் மற்றும் பதக்கங்கள் ஆகியவற்றை எற்படுத்துதலும், வழங்குதலும்;

(xvi) ஆராய்ச்சி மற்றும் பிற பணிகளைப் பொறுத்த அளவில் அச்சிடுவதற்கு, மறு தயாரிப்பு செய்வதற்கு மற்றும் வெளியிடுவதற்கு வகை செய்தலும், கண்காட்சிகளுக்கு ஏற்பாடுசெய்தலும்;

(xvii) சட்டம், நீதி மற்றும் சமூக மேம்பாட்டுக் கூறுகள் அனைத்திலும் ஆராய்ச்சிக்கு ஆதரவளித்தல் மற்றும் ஆராயச்சிப்பணியை பொறுப்பேற்று மேற்கொள்ளுதல்;

(xviii) இப்பள்ளி அவ்வப்போது தீர்மானிக்கக்கூடிய வரையறைகள் மற்றும் நிபந்தனைகளின் பேரில், உடன்படக்கூடிய நோக்கங்களுக்காக, சட்டம், நீதி, சமூக மேம்பாடு, அவை சார்ந்த பொருட்பாடுகள் ஆகியவற்றில் கல்வி கற்பித்தல், பயிற்சி அளித்தல், ஆராய்ச்சி செய்தல் ஆகியவை தொடர்பாக பிற அமைப்பு எதனுடனும் ஒத்துழைத்தல்;

(xix) பொதுவான குறிக்கோள்களுக்கு உகந்ததாயிருக்கக்கூடிய அத்தகைய முறையில் ஆசிரியர்களையும் அறிஞர்களையும் மாற்றிக்கொள்வதன் மூலம் இப்பள்ளிக்கான குறிக்கோள்களைப் போன்ற குறிக்கோள்களை முழுவதுமாகவோ பகுதியாகவோ பெற்றிருக்கின்றதும் உலகத்தின் பகுதி எதிலும் உள்ளதுமான உயர் கல்வி நிலையங்களுடன் ஒத்துழைத்தல்;

(xx) இப்பள்ளியின் செலவினத்தை முறைப்படுத்துதலும் அதன் கணக்குகளை மேலாண்மை செய்தலும்;

(xxi) இப்பள்ளியின் வளாகங்களுக்குள்ளேயோ வேறெங்கேனுமோ இப்பல்கலைக்கழகம் தேவையெனக் கருதக்கூடிய வகுப்பறைகளையும் படிப்புக் கூடங்களையும் நிறுவிப் பேணிவருதலும், அவற்றில் போதிய அளவு அறைகலன்களை வழங்குதலும் மற்றும் இப்பள்ளிக்கு உகந்ததாகவோ தேவையானதாவோ தோன்றக் கூடிய நூலகங்களையும் படிப்பதற்கான அறைகளையும் அமைத்துப் பேணிவருதலும்;

(xxii) இப்பள்ளியின் நோக்கத்திற்காகவும், எந்தக் குறிக்கோள்களுக்காக இப்பள்ளியானது நிறுவியமைக்கப்பட்டுள்ளதோ அந்தக் குறிக்கோள்களுக்கு இணங்கிய வகையிலும் மானியங்கள், உதவித் தொகைகள், சந்தாத் தொகைகள், நன்கொடைகள், கொடைகள் ஆகியவற்றைப் பெறுதல்;

(xxiii) இப்பள்ளியின் நோக்கத்திற்காகத் தேவையாயிருக்கக்கூடிய அல்லது உகந்ததாயிருக்கக்கூடிய மற்றும் அது பொருத்தமானதெனவும் முறையானதெனவும் கருதக்கூடிய வரையறைகள் மற்றும் நிபந்தனைகளின் பேரில், நிலம் அல்லது கட்டடம் எதனையுமோ அல்லது பணியமைப்புகள் எவற்றையுமோ விலைக்கு வாங்குதல், குத்தகைக்கு எடுத்தல், கொடைகளாக அல்லது மற்றப்படியாக அவற்றை ஏற்றுக்கொள்ளுதல்; மற்றும் அத்தகைய கட்டடம் அல்லது பணியமைப்பு எதனையும் கட்டுதல் அல்லது மாற்றியமைத்தல் மற்றும் அதனைப் பேணிவருதல்;

(xxiv) இப்பள்ளியின் உரிமை நலன்களுக்கும் செயற்பாடுகளுக்கும் குந்தகமின்றி, அது பொருத்தமெனவும் முறையானதெனவும் கருதக்கூடிய அத்தகைய வரையறைகளின் பேரில் இப்பள்ளியின் அசையும் அல்லது அசையாச் சொத்துக்கள் அனைத்தையுமோ அவற்றின் பகுதி எதனையுமோ விற்பனை செய்தல், பரிமாற்றம் செய்தல், குத்தகைக்கு விடுதல் அல்லது மற்றப்படி அவற்றிற்கு ஒரு முடிவு செய்தல்;

(xxv) இந்திய அரசின் மற்றும் பிற கடனுறுதிச் சீட்டுகள், மாற்றுச் சீட்டுகள், காசோலைகள் அல்லது பிற மாற்று முறையாவணங்களை எழுதுதல், மற்றும் ஏற்றுக்கொள்ளுதல், தயாரித்தல் மற்றும் மேற் குறிப்பு எழுதுதல், தள்ளுபடி செய்தல் மற்றும் பணத்தொகையாக மாற்றுதல்;

(xxvi) இப்பள்ளிக்குச் சொந்தமான அல்லது இப்பள்ளியின் நோக்கத்திற்காக ஈட்டப்படவுள்ள அரசு கடனீட்டுப் பத்திரங்கள் உள்ளடங்கலாக, அசையும் அல்லது அசையாச் சொத்தினைப் பொறுத்த அளவிலான உடைமை மாற்றம், உரிமை மாற்றங்கள், மறு உடைமை மாற்றங்கள், அடைமானங்கள், குத்தகைகள், உரிமங்கள் மற்றும் உடன்பாடுகள் ஆகியவற்றை எழுதிக்கொடுத்தல்;

(xxvii) இப்பள்ளியின் வகுப்பு அல்லது துறை எதனையும் நடத்திவருவதை விட்டுவிடுதல் மற்றும் நிறுத்திவிடுதல்;

(xxviii) மானியங்களைப் பெறுவதற்காக மைய அரசுடனோ, மாநில அரசுகளுடனோ, பல்கலைக் கழக மானிய ஆணையக் குழுவுடனோ பிற அதிகார அமைப்புகளுடனோ உடன்பாடு எதனையும் செய்துகொள்ளுதல்;

(xxix) உகந்ததெனக் கருதக்கூடிய வரையறைகளின் பேரில் எவ்வகையினதுமான பணமளிப்புகளை, கடனீட்டுப் பத்திரங்களை அல்லது சொத்தினை ஏற்றுக்கொள்ளுதல்;

(xxx) பிணை முறிகள், அடைமானங்கள், கடனுறுதிச் சீட்டுகள் அல்லது பிற கடமைப் பொறுப்புகளின் பேரிலோ பிணையங்களின் பேரிலோ இப்பள்ளியின் சொத்துக்கள் மற்றும் உடைமைகள் அனைத்தின் மீதும் அல்லது அவற்றில் ஏதொன்றின் மீதும் அல்லது பிணையங்கள் எவையுமின்றி மற்றும் அது பொருத்தமெனக் கருதக்கூடிய வரையறைகள் மற்றும் நிபந்தனைகளின் பேரில் பணத்தினைப் பெறுதல் மற்றும் கடன் வாங்குதல் மற்றும் இப்பள்ளியின் நிதியங்களிலிருந்து பணத்தினைப் பெறுதல் மற்றும் கடன் வாங்கப்பட்ட பணம் எதனையும் திருப்பிச் செலுத்துதல் மற்றும் மீட்டுக்கொள்ளுதல் குறித்து ஏற்பட்ட இடைவிளைவான செலவுகள் அனைத்தையும் கொடுத்துத் தீர்த்தல்;

(xxxi) இப்பள்ளியின் நிதியங்களை அல்லது இப்பள்ளிக்கு ஒப்படைக்கப்பட்ட பணத்தை அது பொருத்தமெனக் கருதக்கூடிய கடனீட்டுப் பத்திரங்களில், அது பொருத்தமெனக் கருதக்கூடிய அத்தகைய முறையில் முதலீடு செய்தல் மற்றும் அவ்வப்போது முதலீடு எதனையும் இடம் மாற்றுதல்;

(xxxii) இப்பள்ளியின் அலுவல்களையும் மேலாண்மையையும் முறைப்படுத்துவதற்கு அப்போதைக்கப்போது தேவையெனக் கருதக்கூடிய அத்தகைய ஒழுங்குமுறை விதிகளைச் செய்தல் மற்றும் அவற்றை மாற்றியமைத்தல், திருத்தியமைத்தல் மற்றும் தள்ளுபடி செய்தல்;

(xxxiii) கல்விசார், தொழில்நுட்ப, நிருவாக மற்றும் பிற பணியாளர் தொகுதியின் நலனுக்காகவென, ஒழுங்குமுறை விதிகளால் வகுத்துரைக்கப்படக்கூடிய அத்தகைய முறையிலும் அத்தகைய நிபந்தனைகளுக்கு உட்பட்டும் அது பொருத்தமெனக் கருதக்கூடிய ஓய்வூதியங்கள், காப்பீடு, வருங்கால வைப்பு நிதியம், பணிக்கொடை ஆகியவற்றை நிறுவுதல் மற்றும் இப்பள்ளியின் பணியாளர் எவரின் நலனுக்காகவும் அது பொருத்தமென கருதக்கூடிய அத்தகைய மானியங்களை அளித்தல்;

(xxxiv) இப்பள்ளியானது அதன் அதிகாரங்களில் அனைத்தையும் அல்லது அவற்றுள் எவற்றையும் இப்பள்ளியின் துணைவேந்தரிடமோ அல்லது குழு எதனிடமோ அல்லது உட்குழு எதனிடமோ அல்லது அக்குழுவின் உறுப்பினர்களில் எவரொருவரிடமோ அல்லது ஒருவருக்கு மேற்பட்ட உறுப்பினர்களிடமோ அல்லது அதன் அலுவலர்களிடமோ ஒப்படைவு செய்தல்; மற்றும்

(xxxv) இப்பள்ளியானது மேற்சொன்ன குறிக்கோள்களை அல்லது அவற்றில் ஏதேனும் ஒன்றை அடைவதற்கு அல்லது விரிவுபடுத்துவதற்குத் தேவையானதாகவோ, இணக்கமானதாகவோ, இடைவிளைவானதாகவோ இருப்பதாக இப்பள்ளி கருதக்கூடிய அத்தகைய பிற செயல்கள் மற்றும் பிற பொருட்பாடுகள் அனைத்தையும் செய்தல்.

பள்ளியில் சேர்த்துக் கொள்ளுதல்.

**6.** **(1)** இப்பள்ளியானது, இந்தச் சட்டத்தின் மற்றும் ஒழுங்குமுறைவிதிகளின் வகைமுறைகளுக்கு உட்பட்டு அனைத்து நபர்களுக்கும் பொதுவானதாக இருத்தல் வேண்டும்.

**(2).** **(1)**– ஆம் உட்பிரிவில் அடங்கியுள்ள எதுவும்,–

(a) வகுத்துரைக்கப்பட்ட கல்வித் தகுதியையோ, தரத்தையோ பெற்றிராத நபர் எவரையும் குறித்தகாலப் படிப்பு எதற்கும் சேர்த்துக் கொள்ளுமாறோ;

(b) பட்டம் அல்லது பிற கல்விச் சிறப்பொன்று வழங்கப் தேவையான குறைந்த அளவு தரத்திற்கும் குறைவான கல்வித் தகுதியைப் பெற்றிருக்கின்ற மாணவர் எவரையும் இப்பள்ளியின் பெயர்ப்பட்டியலில் வைத்திருக்குமாறோ; அல்லது

(c) இப்பள்ளியின் நலனுக்கோ பிற மாணவர்களின் மற்றும் ஆசிரியர்களின் உரிமைகளுக்கும் சிறப்புரிமைகளுக்குமோ குந்தகம் விளைவிக்கத்தக்க நடத்தையை உடைய நபர் எவரையும் சேர்த்துக் கொள்ளுமாறோ அல்லது மாணவர் எவரையும் இருத்தி வைத்துக் கொள்ளுமாறோ,

இப்பள்ளியைக் கோருதலாகாது.

**(3).** **(1)** மற்றும் **(2)**– ஆம் உட்பிரிவுகளின் வகைமுறைகளுக்கு உட்பட்டு, அரசு, ஆணையின் மூலம் இப்பள்ளியானது நூற்றுக்கு அத்தகைய விழுக்காட்டளவு இடங்களை ஒதுக்கீடு செய்தல் வேண்டும் எனப் பணிக்கலாம்.

(i) அந்த ஆணையில் குறித்துரைக்கக்கூடியவாறு தமிழ்நாட்டில் குடியிருக்கும் மாணவர்களுக்கும்;

(ii) அந்த ஆணையில் குறித்துரைக்கக்கூடியவாறு அருந்ததியர்கள் உள்ளடங்கலாக பட்டியல் சாதிகள், பட்டியல் பழங்குடிகள், சீர்மரபினர் உள்ளடங்கலான மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் பிற்படுத்தப்பட்ட முஸ்லீம் இனத்தவர் மற்றும் அத்தகைய பிற சிறப்பு இனங்களைச் சார்ந்த மாணவர்களுக்கும்; மற்றும் அத்தகைய பணிப்புரை வழங்கப்பட்டிருக்கின்றவிடத்து, இப்பள்ளியானது அதற்கிணங்கிய வகையில் இடங்களை ஒதுக்கீடு செய்தல் வேண்டும்.

**விளக்கம்.**– இந்தப் பிரிவின் நோக்கத்திற்காக, ''தமிழ்நாட்டில் குடியிருக்கும் மாணவர்'' என்றால் ,–

(i) தகுதித் தேர்வினையொட்டி முன்னதாக நான்கு ஆண்டுகளுக்குக் குறையாததொரு கால அளவுக்கு இம்மாநிலத்தில் குடியிருந்திருக்கிற மாணவர் ஒருவரையோ அல்லது அவ்வாறு குடியிருந்திருக்கிற நபரைத் தம் பெற்றோர்களில் ஒருவராகக் கொண்ட மாணவர் ஒருவரையோ குறிக்கும்; அல்லது

(ii) தகுதித் தேர்விற்கு வழி வகுக்கிற நான்கு ஆண்டுகளுக்கு குறையாததொரு கால அளவிற்கு இம்மாநிலத்திலுள்ள கல்வி நிறுவனங்கள் ஏதொன்றிலும் படித்திருக்கிற மாணவர் ஒருவரைக் குறிக்கும்.

மேற்பார்வை.

**7.** **(1)** வேந்தர் தான் பணிக்கக்கூடிய அத்தகைய நபர் அல்லது நபர்களால் இப்பள்ளி, அதன் கட்டடங்கள், அருங்காட்சியகங்கள், பணிக்கூடங்கள், தளவாடம் ஆகியவற்றையும், இப்பள்ளியால் பேணிவரப்படுகிற, ஏற்பளிக்கப்பட்டுள்ள, அல்லது ஒப்புதலளிக்கப்பட்டுள்ள கல்வி நிலையம் எதனையும் மற்றும் இப்பள்ளியால் நடத்தப்படும் அல்லது செய்யப்படும், தேர்வு, கற்பித்தல் மற்றும் பிற பணிகள் குறித்து ஆய்வு செய்ய ஆவன செய்வதற்கான மற்றும் இப்பள்ளி தொடர்பான பொருட்பாடு எதனையும் பொறுத்த விசாரணை செய்ய ஆவன செய்வதற்கான உரிமை

பெற்றிருத்தல் வேண்டும். வேந்தரானவர் ஒவ்வொரு நேர்விலும் அத்தகைய ஆய்வையோ விசாரணையையோ செய்ய ஆவன செய்வதற்கான தன் உட்கருத்து பற்றிய அறிவிப்பை இப்பள்ளிக்குக் கொடுத்தல் வேண்டும்; மேலும் இப்பள்ளி அதில் அதன் தரப்பிலான கருத்தினை எடுத்துரைப்பதற்கு உரிமையுடையதாகும்.

(2) வேந்தரானவர், அத்தகைய ஆய்வு அல்லது விசாரணையின் முடிவுகள் குறித்த தன் கருத்துக்களைச் செயலாட்சி மன்றத்திற்குத் தெரியப்படுத்துதல் வேண்டும்;மற்றும் அதன் மீதான செயலாட்சி மன்றத்தின் கருத்தை உறுதிப்படுத்திக் கொண்ட பின்னர், எடுக்கப்படவேண்டிய நடவடிக்கை குறித்து இப்பள்ளிக்கு ஆலோசனை கூறலாம் என்பதோடு அத்தகைய நடவடிக்கை எடுக்கப்படுவதற்கான காலவரம்பொன்றையும் நிர்ணயிக்கலாம்.

(3) செயலாட்சி மன்றமானது, அத்தகைய ஆய்வு அல்லது விசாரணையின் விளைவாக எடுக்கக் கருதியுள்ள அல்லது எடுக்கப்பட்டிருக்கிற நடவடிக்கை ஏதேனுமிருப்பின், அது குறித்துத் துணைவேந்தர் மூலமாக வேந்தருக்கு அறிக்கை அனுப்புதல் வேண்டும். அத்தகைய அறிக்கையானது வேந்தர் பணிக்கக்கூடிய அத்தகைய காலத்திற்குள்ளாகப் பணிந்தனுப்பப்படுதல் வேண்டும்.

(4) செயலாட்சி மன்றமானது நியாயமானதொரு கால அளவிற்குள் வேந்தர் நிறைவு கொள்ளும் வகையில் நடவடிக்கை எடுக்காதவிடத்து, வேந்தரானவர் செயலாட்சி மன்றத்தால் அளிக்கப்பட்ட விளக்கம் அல்லது செய்யப்பட்ட முறையீடு எதனையும் பரிசீலனை செய்தபின்னர், தாம் பொருத்தமெனக் கருதுகிற அத்தகைய பணிப்பாணைகளைப் பிறப்பிக்கலாம்; மற்றும் செயலாட்சி மன்றமானது, அத்தகைய பணிப்பாணைகளுக்கு இணங்கி நடத்தல் வேண்டும். செயலாட்சி மன்றமானது வேந்தரால் அதற்கென நிர்ணயிக்கப்படக்கூடிய அத்தகைய காலத்திற்குள்ளாக அத்தகைய பணிப்பாணைகளுக்கு இணங்கி நடக்காது போகும் தருணத்தில், அத்தகைய பணிப்பாணைகளுக்கு இணங்கி நடக்கும் பொருட்டு, நபர் எவரையுமோ அல்லது அமைப்பு எதனையுமோ நியமிப்பதற்கும் அதன் செலவுகளுக்காகத் தேவையாயிருக்கக்கூடிய அத்தகைய ஆணைகளைப் பிறப்பிப்பதற்கும் வேந்தர் அதிகாரமுடையவராவார்.

## அத்தியாயம் III.

## பள்ளியின் அலுவலர்கள்.

8. இப்பள்ளியானது, பின்வரும் அலுவலர்களைக் கொண்டதாக இருக்கும், அதாவது:— பள்ளியின் அலுவலர்கள்.

(1) வேந்தர்;

(2) இணைவேந்தர்;

(3) துணை வேந்தர்;

(4) பதிவாளர்;

(5) நிதி அலுவலர்;

(6) தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர்; மற்றும்

(7) இப்பள்ளியின் அலுவலர்களென, ஒழுங்கு முறை விதிகளினால் விளம்பப்படக்கூடிய அத்தகைய பிற நபர்கள்.

**9.** (1) சென்னை உயர்நீதி மன்றத்தின் தலைமை நீதிபதி, இப்பள்ளியின் வேந்தராக இருந்து வருவார்: வேந்தர்.

**வரம்புரை:** ஆனால், தலைமை நீதிபதியானவர், சென்னை உயர்நீதிமன்றத்தின் நீதிபதியொருவரை இப்பள்ளியின் வேந்தராகப் பெயர்குறித்து நியமிக்கலாம்.

(2) வேந்தரானவர் தமது பதவியின் காரணமாக இப்பள்ளியின் தலைவராக இருப்பார்; மற்றும் பொது மன்றத்தின் கூட்டங்கள் எவற்றுக்கும் வந்திருக்கும்போது, பொது மன்றத்தின் கூட்டங்களில் தலைமை வகிப்பார் மற்றும் இப்பள்ளியின் பட்டமளிப்பு விழா எதற்கும் வந்திருக்கும் போது, தலைமை வகித்துப் பட்டங்கள் அல்லது பிற கல்விச் சிறப்புகளைப் பெற உரிமைத்தகுதியுடையவர்களுக்கு அவற்றை வழங்குவார்.

(3) அதிகார அமைப்புகளுக்கு நபர்களைப் பெயர்குறித்து நியமிப்பதற்கான அதிகாரம் வேந்தருக்கு வழங்கப்பட்டிருக்கிறவிடத்து, வேந்தரானவர், துணைவேந்தருடன் கலந்தாய்வு செய்து, தேவையான அளவுக்கு, மற்றப்படி போதிய அளவு சார்பான்மை பெற்றிராத பிரிவுகளைச் சேர்ந்தவர்களின் நலன்களுக்குச் சார்பாளர்களாக அமையும் பொருட்டு, நபர்களைப் பெயர் குறித்து நியமித்தல் வேண்டும்.

(4) வேந்தர், தாமே முற்பட்டோ, அல்லது விண்ணப்பத்தின் மீதோ நடவடிக்கைகள் எவற்றையும் பொறுத்து, அத்தகைய நடவடிக்கைகளின் முறைமை குறித்தோ அவற்றில் எடுக்கப்பட்ட முடிவு அல்லது பிறப்பிக்கப்பட்ட ஆணை ஏதொன்றின் சீர்மை, சட்டமுறைமை அல்லது பொருத்தமுடைமை குறித்தோ, தான் தெளிவுற உறுதிப்படுத்திக் கொள்ளும் பொருட்டு, இப்பள்ளியின் அலுவலர்கள் எவரின் அல்லது அதிகாரஅமைப்பு ஏதொன்றின் பதிவுக்கட்டினையும் தருவித்து ஆய்வு செய்யலாம்; மற்றும் எந்த நேர்விலும் அத்தகைய நடவடிக்கை, முடிவு அல்லது ஆணை எதுவும் திருத்தியமைக்கப்படவோ, அறவு செய்யப்படவோ, எதிர்மாறாக்கப்படவோ, அல்லது மறுபரிசீலனைக்காகத் திருப்பி அனுப்பிவைக்கப்படவோ வேண்டும் என்று வேந்தருக்குத் தோன்றுமாயின், அவர், அதன்படியே ஆணைகளைப் பிறப்பிக்கலாம்:

**முதலாம் வரம்புரை:** ஆனால், இந்த உட்பிரிவின்படியான அதிகாரங்கள் செலுத்தப்படுவதற்காக, வேந்தரிடம் செய்துகொள்ளப்படும் ஒவ்வொரு விண்ணப்பமும், அந்த விண்ணப்பம் தொடர்புடையதாக இருக்கிற நடவடிக்கை, முடிவு, அல்லது ஆணை எந்தத் தேதியில் அவ்விண்ணப்பதாரருக்கு தெரிவிக்கப்பட்டதோ அந்தத் தேதியிலிருந்து மூன்று திங்களுக்குள் செய்துகொள்ளப்படுதல் வேண்டும்:

**இரண்டாம் வரம்புரை:** மேலும், எந்த நபருக்கும் கேடு விளைவிக்கத்தக்கதான ஆணை எதுவும், தன் முறையீடுகளைச் செய்து கொள்வதற்கான வாய்ப்பொன்று அத்தகைய நபருக்குக் கொடுக்கப்பட்டிருந்தாலன்றி, பிறப்பிக்கப்படுதலாகாது.

(5) வேந்தர், இந்தச் சட்டத்தின் வகைமுறைகளினாலோ, அல்லது அதன்படியாகவோ தமக்கு வழங்கப்படக்கூடிய அதிகாரங்களைச் செலுத்தி வருவதோடு பிற கடமைகளையும் ஆற்றி வருவார்.

இணைவேந்தர்.

**10.** (1) இம்மாநிலத்தில் சட்டத்துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அமைச்சர், இப்பள்ளியின் இணைவேந்தராக இருந்து வருவார்.

(2) வேந்தர் வாராதிருக்கையில், அல்லது வேந்தர் செயல்படுவதற்கு இயலாதிருக்கும்போது, இணை வேந்தர், வேந்தரின் அதிகாரங்கள் அனைத்தையும் செலுத்திவருவார்; மற்றும் அலுவல்கள் அனைத்தையும் ஆற்றி வருவார்.

(3) இணை வேந்தரானவர், இந்தச் சட்டத்தினாலோ அல்லது அதன் படியாகவோ தமக்கு வழங்கப்படக்கூடிய அத்தகைய பிற அதிகாரங்களைச் செலுத்தி வருதலும், அத்தகைய பிற அலுவல்களை ஆற்றி வருதலும் வேண்டும்.

துணை வேந்தர்.

**11.** (1) துணைவேந்தரின் ஒவ்வொரு நியமனமும் (2)–ஆம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள குழுவினால் பரிந்துரைக்கப்பட்ட மூன்று பெயர்களைக் கொண்ட பெயர்ப்பட்டியல் ஒன்றிலிருந்து வேந்தரால் செய்யப்படுதல் வேண்டும்; மற்றும் அத்தகைய பெயர்ப்பட்டியலில் மேற்சொன்ன குழுவின் உறுப்பினர் எவரது பெயரும் அடங்கியிருத்தல் கூடாது:

**வரம்புரை**: ஆனால், வேந்தர் அக்குழுவினால் அவ்வாறு பரிந்துரைக்கப்பட்ட பெயர்ப்பட்டியலிலுள்ள நபர்களில் எவரையும் ஏற்கவில்லை எனில், வேறு மூன்று பெயர்களைக்

கொண்ட புதிய பெயர்ப்பட்டியல் ஒன்றை அளிப்பதற்காக, அவர் (2)–ஆம் உட்பிரிவிற்கு இணங்க மற்றொரு குழுவினை அமைத்துருவாக்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கலாம்; மற்றும் அப்புதிய பெயர்ப்பட்டியலில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள நபர்களில் ஒருவரைத் துணை வேந்தராக அவர் நியமனம் செய்தல் வேண்டும்.

(2). (1)–ஆம் உட்பிரிவின் நோக்கத்திற்காக, அக்குழுவானது மூன்று நபர்களைக் கொண்டிருக்கும்;அவர்களில் ஒருவர் வேந்தரால் பெயர் குறித்து நியமிக்கப்படுதல் வேண்டும்; ஒருவர், அரசினால் பெயர் குறித்து நியமிக்கப்படுதல் வேண்டும்; மற்றும் ஒருவர் பொது மன்றத்தினால் பெயர் குறித்து நியமிக்கப்படுதல் வேண்டும்:

**வரம்புரை**: ஆனால், அவ்வாறு பெயர் குறித்து நியமிக்கப்பட்ட நபர், இப்பள்ளியின் அதிகார அமைப்புகள் எதிலும் ஓர் உறுப்பினராக இருப்பவராக இருத்தல் கூடாது.

(3) துணை வேந்தர் மூன்றாண்டுக் காலஅளவுக்குப் பதவி வகிப்பார். மேற்கொண்டு மூன்றாண்டுக் கால அளவுக்கு மீண்டும் நியமிக்கப்படுவதற்கும் தகுதியுடையவராயிருப்பார்:

**முதலாம் வரம்புரை**: ஆனால், நபர் எவரும் துணைவேந்தரின் பதவியை மொத்தத்தில் ஆறு ஆண்டுகளுக்கு மேல் வகித்தல் கூடாது:

**இரண்டாம் வரம்புரை:** மேலும், துணைவேந்தரானவர், வேந்தருக்கு முகவரியிட்டு எழுத்துருவில் தாம் கையொப்பமிட்டு அனுப்புவதன் மூலமாகவும், இரண்டு திங்கள் கால முன் அறிவிப்புக் கொடுத்ததற்குப் பின்பும், தமது பதவியை விட்டு விலகலாம்:

**மூன்றாம் வரம்புரை**: அதோடுகூட, துணை வேந்தராக நியமிக்கப்பட்ட ஒருவர், தம்முடைய பதவிக் காலத்தின் போது அறுபத்தைந்து வயதினை நிறைவெய்துவாராயின், பதவியிலிருந்து ஓய்வு பெறுதல் வேண்டும்.

(4) துணை வேந்தரின் பதவியில் தற்காலிகக் காலியிடம் ஏதேனும் ஏற்படும்போது, அல்லது நோய், பணிக்கு வாராமை என்கின்ற காரணத்தினாலோ, அல்லது ஏதேனும் பிற காரணத்தினாலோ, அத்துணைவேந்தர் தம்முடைய பதவியின் அதிகாரங்களைச் செலுத்திவரவும், கடமைகளை ஆற்றி வரவும் இயலாதிருக்கும்போது, துணை வேந்தரின் அதிகாரங்களைச் செலுத்தி வருவதற்கும், கடமைகளை ஆற்றி வருவதற்கும் தேவைப்படும் ஏற்பாடுகளை செயலாட்சி மன்றமானது செய்கின்றவரையிலும், இப்பள்ளியின் மிக்க முதுநிலைப்பேராசிரியர், அத்துணைவேந்தரின் அதிகாரங்களைச் செலுத்தி வருவதோடு கடமைகளையும் ஆற்றிவருவார்.

(5) துணை வேந்தர், இப்பள்ளியின் முழுநேர அலுவலர் ஆவார்;அவருடைய பதவி ஊதியங்களும் பிற பணி வரையறைகளும் நிபந்தனைகளும் பின்வருவனவாக இருக்கும்:–

(a) துணை வேந்தருக்கு, திங்களொன்றுக்கு எழுபத்தைந்தாயிரம் ரூபாய் அறுதியிட்ட சம்பளத்துடன் திங்களொன்றுக்கு ஐந்தாயிரம் ரூபாய் தனிப்படியோ அல்லது அவ்வப்போது அரசினால் நிர்ணயிக்கப்படக்கூடிய அத்தகைய அதிகப்படியான சம்பளமோ வழங்கப்படுவதோடு, அவர் அறைகலன்களுடன் கூடிய குடியிருப்பு ஒன்றை வாடகைத் தொகை செலுத்தாது பயன்படுத்துவதற்கும் உரிமைத்தகுதியுடையவராவார்; மற்றும் அத்தகைய குடியிருப்பினைப் பராமரிக்கும் பொருட்டு ஆகும் பொறுப்பு எதுவும் துணைவேந்தரைச் சார்தல் கூடாது. ஒழுங்குமுறை விதிகளால் வகை செய்யப்படக்கூடிய அத்தகைய பிற இடை ஆதாயங்களைப் பெறுவதற்கும் அவர் உரிமைத்தகுதியுடையவராவார்;

(b) துணைவேந்தர், அவ்வப்போது வேந்தரின் ஒப்புதலுடன், செயலாட்சி மன்றத்தினால் நிர்ணயிக்கப்படக்கூடிய, அத்தகைய பணிமுடிவுக்கால நலன்களுக்கும் படித்தொகைகளுக்கும் உரிமைத்தகுதியுடையவராவார்:

**வரம்புரை**: ஆனால், இப்பள்ளியின் பணியாளரொருவர் துணைவேந்தராக நியமிக்கப்படுமிடத்து, அவர் தொகையளிப்புச் செய்பவராக இருக்கிற வருங்கால வைப்பு நிதியத்திற்குத் தொடர்ந்து தொகையளித்துவர அவர் அனுமதிக்கப்படுவார்; மேலும் இப்பள்ளியின்

பங்களிப்பானது, துணை வேந்தராக அவர் நியமிக்கப்படுவதற்கு அடுத்து முன்பு அவர் பங்களித்திருந்த அளவுக்கு மட்டுப்படுத்தப்படுதல் வேண்டும்;

(c) துணைவேந்தரானவர், செயலாட்சி மன்றத்தினால் நிர்ணயிக்கப்படக்கூடிய அத்தகைய வீதத்தில் பயணப்படித் தொகைகளுக்கு உரிமைத்தகுதியுடையவராவார்;

(d) துணைவேந்தர், செயற்படு பணியிலிருக்கும்போது அவரால் பணியில் செலவழிக்கப்பட்ட கால அளவுகளில் பதினொன்றில் ஒரு பங்கு கால அளவுக்கான முழுச் சம்பளத்துடன் கூடிய ஈட்டிய விடுப்புக்கு உரிமைத்தகுதியுடையவராவார்:

**வரம்புரை:** ஆனால், அவரது பதவிக்கால அளவு முடிவடைகிற தேதியில், அவர் ஈட்டிய விடுப்பை தம் பதவிக்காலஅளவு முடிவடைகிற தேதிக்கு முன்னர் பயன்படுத்தியிருக்கவில்லையெனில், தம் பதவியை விட்டு நீங்கியதற்குப் பின்பு, இருநூற்று நாற்பது நாட்கள் என்கின்ற பெரும அளவிற்கு உட்பட்டுத் தம் இருப்பில் உள்ள ஈட்டிய விடுப்பைப் பொறுத்து விடுப்புச் சம்பளத்திற்கு நிகரான மதிப்புள்ள பணத்தைப் பெறுவதற்கு அவர் உரிமைத் தகுதியுடையவராவார்;

(e) துணை வேந்தர், தம் பதவிக் காலத்தின் போது, மருத்துவக் காரணங்களுக்காகவோ மற்றப்படியோ, மூன்று திங்களுக்கு மேற்படாத ஒரு கால அளவிற்குச் சம்பளமில்லாத விடுப்புக்கு உரிமைத் தகுதியுடையவராவார்:

**வரம்புரை**: ஆனால், எந்த அளவிற்கு, (d) எனும் கூறின்படி ஈட்டிய விடுப்புக்கு அவர் உரிமை தகுதியுடையவரோ அந்த அளவிற்கு அத்தகைய விடுப்பினை, முழுச் சம்பளத்துடனான விடுப்பாக மாற்றிக் கொள்ளலாம்.

துணை வேந்தரை நீக்குதல்.

**12.** (1) துணை வேந்தர், இந்தச் சட்டத்தின் வகைமுறைகளை நிறைவேற்றுவதற்கு வேண்டுமென்றே விட்டுவிடுகிறார் அல்லது மறுக்கிறாரென்றோ, அவரிடம் உற்றமைந்திருக்கும் அதிகாரங்களைத் தவறாகப் பயன்படுத்துகிறாரென்றோ, தவறாக நடக்கிறாரென்றோ, தவறாக நிருவகிக்கிறாரென்றோ, அவரது நடத்தை, ஒழுக்கக் கேட்டை உள்ளடக்கியதாக இருக்கிறதென்றோ வேந்தர் கருதுவாராயின், அல்லது மற்றப்படி துணை வேந்தர் அவரது பதவியில் தொடர்ந்திருப்பது இப்பள்ளியின் நலனுக்கு ஊறுவிளைவிக்கும் என்று வேந்தருக்குத் தோன்றுமாயின், வேந்தர், அப்பொருட்பாடு குறித்து விசாரணை செய்வதற்காக மூன்று உறுப்பினர்களுக்குக் குறையாமல் கொண்டிருக்கின்ற குழுவொன்றை அமைத்துருவாக்குமாறும், அக்குழுவின் அறிக்கையினை வேந்தரின் முன் வைக்குமாறும் இணை வேந்தரைப் பணிக்கலாம்.

(2) வேந்தரானவர், அக்குழுவின் அறிக்கையினைப் பரிசீலனை செய்த பின்பு, துணை வேந்தர் அவரது பதவியில் தொடர்ந்திருப்பது இப்பள்ளியின் நலனுக்கு ஊறு விளைவிக்கும் என்று தாம் தெளிவுறக் காண்பாராயின் அல்லது அவர் மீது சாட்டப்பட்ட குற்றச்சாட்டுகள் அனைத்தையும் அல்லது அதில் ஏதொன்றையும் அவர் செய்துள்ள குற்றவாளியாகக் காணப்படுவாராயின், துணை வேந்தரை ஆணையின் மூலமாகப் பதவியிலிருந்து நீக்கலாம்:

**வரம்புரை**: ஆனால், அவர் தம் தரப்பினைக் கேட்பதற்கு நியாயமான வாய்ப்பொன்று துணை வேந்தருக்கு அளிக்கப்பட்டாலன்றி, இந்தப் பிரிவின்படியான ஆணை எதுவும் பிறப்பிக்கப்படுதல் கூடாது.

துணை வேந்தரின் அதிகாரங்களும் கடமைகளும்.

**13.** (1) துணை வேந்தர், இப்பள்ளியின் கல்வித் தலைவராகவும் முதன்மைச் செயலாட்சி அலுவலராகவும் இருப்பார்.

(2) துணை வேந்தரானவர், வேந்தரும் இணை வேந்தரும் வருகை புரியாத, பொது மன்றக் கூட்டத்திலும் மற்றும் இப்பள்ளி பட்டமளிப்பு விழாவிலும் தலைமையேற்று, பட்டங்கள் மற்றும் பிற கல்விச் சிறப்புகளையும் பெறுவதற்கான உரிமையுடைய நபர்களுக்கு அவற்றை வழங்குதல் வேண்டும்.

(3) துணைவேந்தர், இப்பள்ளியின் அலுவல்களின் மீது கட்டுப்பாட்டு அதிகாரத்தைச் செலுத்திவருவார்; மேலும், இப்பள்ளியில் ஒழுங்குநெறி உரியவாறு பேணிவரப்படுவதற்குப் பொறுப்புடையவராவார்.

(4) துணைவேந்தர், இந்தச் சட்டத்தின் வகைமுறைகள், அவற்றின்படிச் செய்யப்படும் ஒழுங்குமுறை விதிகள் ஆகியவை உண்மையாகக் கடைப்பிடிக்கப்படுவதை உறுதிசெய்தல் வேண்டும்; மற்றும் அந்நோக்கத்திற்காகத் தேவையான அதிகாரங்களனைத்தையும் அவர் செலுத்தி வரலாம்.

(5) துணை வேந்தர், இப்பள்ளி ஆசிரியர்கள் மற்றும் பிற பணியாளர்களை நியமனம் செய்வது, தற்காலிகப் பணி நீக்கம் செய்வது, பணியறவு செய்வது ஆகியவை தொடர்பான செயலாட்சி மன்றத்தின் ஆணைகளையும், செயலாட்சி மன்றத்தின் பிற முடிவு எதனையும் செயற்படுத்துதல் வேண்டும்.

(6) உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டியது தேவையாகிறது என்று துணைவேந்தர் கருதுகிற நெருக்கடி நிலை எதிலும், அவர், தாம் தேவையெனக் கருதுகிற நடவடிக்கையை எடுத்தல் வேண்டும்; மேலும், அவர், கிடைக்கின்ற மிக முந்தைய வாய்ப்பைப் பயன்படுத்தி, அப்பொருட்பாட்டின் மீது அதன் வழக்கமான போக்கில் நடவடிக்கையெடுத்திருக்கக் கூடிய அலுவலருக்கு, அதிகார அமைப்பிற்கு அல்லது அமைப்பிற்கு எடுக்கப்பட்ட அந்நடவடிக்கை குறித்து அறிக்கை அனுப்புதல் வேண்டும்:

**வரம்புரை**: ஆனால், அத்தகைய ஆணை எதுவும், அதனால் பெரும்பாலும் பாதிக்கப்படக்கூடிய நபருக்கு அவர்தம் தரப்பை எடுத்துரைப்பதற்கான நியாயமான வாய்ப்பொன்று கொடுக்கப்பட்டிருந்தாலன்றி, பிறப்பிக்கப்படுதலாகாது.

(7). (6)–ஆம் உட்பிரிவின்படி துணை வேந்தரின் ஆணை எதனாலும் குறையுற்ற நபர் எவரும், அத்தகைய ஆணை பற்றி தமக்குத் தெரிவிக்கப்பட்ட தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குள்ளாக, பொது மன்றத்திற்கு மேல்முறையீடொன்றைத் தாக்கல் செய்து கொள்ளலாம்; மேலும், துணை வேந்தர், அத்தகைய மேல்முறையீட்டின் மீது, பொது மன்றத்தினால் பிறப்பிக்கப்பட்ட ஆணைக்குச் செயல் வடிவம் கொடுத்தல் வேண்டும்.

(8) துணை வேந்தரானவர், செயலாட்சி மன்றத்தின் மற்றும் நிதிக்குழுவின் பதவிவழித் தலைமையாளராவார். துணை வேந்தரானவர், இப்பள்ளியின் அதிகார அமைப்பு அல்லது பிற அமைப்பு ஏதொன்றின் கூட்டமெதிலும் வந்திருப்பதற்கும் உரை நிகழ்த்துவதற்கும் உரிமைத் தகுதியுடையவராயிருப்பார். ஆனால் அத்தகைய அதிகார அமைப்பின் அல்லது அமைப்பின் உறுப்பினரொருவராக அவர் இருந்தாலன்றி, அதில் வாக்களிக்க உரிமைத் தகுதியுடைவராகமாட்டார்.

(9) துணை வேந்தரானவர், பொது மன்றம், செயலாட்சி மன்றம், கல்வி மன்றம், நிதிக்குழு ஆகியவற்றின் கூட்டங்களைக் கூட்டுவதற்கான அதிகாரங்களைப் பெற்றிருத்தல் வேண்டும்.

(10) துணைவேந்தர், கற்பித்தல் மற்றும் ஆராய்ச்சி, விரிவாக்கக் கல்வி மற்றும் பாடத்திட்ட மேம்பாடு ஆகியவற்றுக்கான ஒருங்கிணைப்பிற்கும் ஒத்திசைவிற்கும், பொறுப்புடையவராயிருப்பார்.

(11) துணை வேந்தரானவர், ஒழுங்குமுறை விதிகளால் வகுத்துரைக்கப்படக்கூடிய அத்தகைய பிற அதிகாரங்களைச் செலுத்தி வருவதோடு, அத்தகைய பிற கடமைகளையும் ஆற்றிவருவார்.

**14.** (1) பதிவாளர், செயலாட்சி மன்றத்தினால் நியமிக்கப்படும் இப்பள்ளியின் சம்பளம் பெறும் முழுநேர அலுவலராக இருந்து வருவார்; பதிவாளர்.

(2) பதிவாளரின் பணி குறித்த வரையறைகளும் நிபந்தனைகளும் பின்வருமாறு இருக்கும்:–

(a) பதிவாளரின் பதவியை வகிப்பவர், அரசு சட்டக்கல்லூரி முதல்வரின் அல்லது பல்கலைக் கழகமொன்றின் பேராசிரியர் படிநிலைக்குக் குறையாத, சட்டம் சார்ந்த துறையில் ஒரு கல்வியாளராக, மூன்றாண்டுகளுக்குக் குறையாமல் உள்ள ஒரு கால அளவிற்கு அத்தகைய தகுதியில் பணி புரிந்துள்ளவராகவோ அல்லது சட்டத்துறை அரசு துணைச் செயலாளரின் படிநிலைக்குக் குறையாததோர் அரசு அலுவலராகவோ இருத்தல் வேண்டும்;

(b) பதிவாளர், மூன்றாண்டுக் காலஅளவுக்குப் பதவி வகிப்பார்; மேலும் மறுநியமனம் செய்யப்படுவதற்குத் தகுதியுடையவராவார்:

**வரம்புரை**: ஆனால், அவர் அரசுப் பணியாளராக உள்ள நேர்வில், ஐம்பத்தெட்டு வயதை அடைந்ததும், மற்றும் இப்பள்ளியின் பேராசிரியராக உள்ள நேர்வில் அறுபது வயதை அடைந்ததும் ஒய்வு பெறுதல் வேண்டும்.

(c) பதிவாளரின் ஊதியங்களும் பணி குறித்த பிற வரையறைகளும் நிபந்தனைகளும் வகுத்துரைக்கப்படக் கூடியவாறு இருக்கும்;

(d) பதிவாளரின் பதவி காலியாக இருக்கும்போது அல்லது நோய், பணிக்கு வாராமை என்கிற காரணத்தினால் அல்லது பிற காரணம் எதனாலேனும் பதிவாளர் தம்முடைய பதவிக் கடமைகளை ஆற்றுவதற்கு இயலாதவராக இருக்கும்போது, பதிவாளரின் பதவிக் கடமைகள் அந்த நோக்கத்திற்காகத் துணை வேந்தரால் குறிப்பிடப்படக்கூடிய அத்தகைய நபரால் ஆற்றி வரப்படுதல் வேண்டும்.

(3) (a) பதிவாளர், இப்பள்ளி ஆசிரியர்கள் மற்றும் கல்விசார் பணியாளர்கள் நீங்கலாக, செயலாட்சி மன்றத்தின் ஆணைகளில் குறித்துரைக்கப்படக்கூடிய பணியாளர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படுவதற்கும், விசாரணை நடத்தப்படுவதற்குமிடையே அவர்களைத் தற்காலிகப் பணி நீக்கம் செய்வதற்கு மற்றும் அவர்களுக்கு எச்சரிக்கை விடுப்பதற்கு அல்லது அவர்கள் மீது கண்டனத் தண்டனை விதிப்பதற்கு அல்லது சம்பள உயர்வை நிறுத்தி வைப்பதற்குமான அதிகாரத்தைப் பெற்றிருப்பார்:

**வரம்புரை**: ஆனால், தொடர்பான நபருக்கெதிராக எடுக்கக் கருதியுள்ள நடவடிக்கைக்கு எதிராகக் காரணம் காட்டுவதற்காக, நியாயமானதொரு வாய்ப்பு அவருக்குக் கொடுக்கப்பட்டிருந்தாலன்றி அத்தகைய தண்டனை எதுவும் விதிக்கப்படுதலாகாது;

(b). (a) எனும்கூறில், குறித்துரைக்கப்பட்டுள்ள தண்டனைகளில் எதையும் விதிக்கின்ற பதிவாளரின் ஆணை ஒன்றுக்கு எதிராகத் துணை வேந்தரிடம் மேல் முறையீடொன்றைச் செய்து கொள்வதற்கு உரிமை உண்டு.

(c) பதிவாளரின் அதிகாரங்களுக்கு மேற்பட்ட தண்டனையை விதிப்பது தேவாயானதென்று, அந்த விசாரணை வெளிப்படுத்துகிற நேர்வு எதிலும், பதிவாளர், அந்த விசாரணை முடிவடைவதன் பேரில், அறிக்கை ஒன்றை, தம்முடைய பரிந்துரைகளோடு சேர்த்துத் துணை வேந்தருக்குக் கொடுத்தல் வேண்டும்; மற்றும் துணை வேந்தர் தாம் பொருத்தமெனக் கருதுகிற அத்தகைய ஆணையைப் பிறப்பித்தல் வேண்டும்:

**வரம்புரை**: ஆனால், தண்டனை எதையும் விதிக்கின்ற துணை வேந்தரின் ஆணை ஒன்றுக்கு எதிராகச் செயலாட்சி மன்றத்திடம் மேல்முறையீடு ஒன்றைச் செய்து கொள்வதற்கு உரிமை உண்டு.

(d). (b) எனும் கூறின்படி அல்லது (c) எனும் கூறின்படியான மேல்முறையீடு எதுவும், எந்த ஆணைக்கு எதிராக மேல்முறையீடு செய்யப்பட்டதோ அந்த ஆணையை மேல்முறையீட்டாளர் பெற்ற தேதியிலிருந்து அறுபது நாட்கள் முடிவடைந்த பின்பு தாக்கல் செய்யப்படுதலாகாது.

(4) இந்தச் சட்டத்தில் மற்றப்படி வகை செய்யப்பட்டுள்ளவாறு தவிர, பதிவாளரானவர், பொது மன்றம், செயலாட்சி மன்றம், கல்வி மன்றம், புலங்கள், மற்றும் பாடக்குழுக்கள் ஆகியவற்றின் *பதவிவழிச்* செயலாளராக இருந்துவருவார்; ஆனால் இந்த அதிகார அமைப்புகளில் ஏதொன்றின் உறுப்பினராக இருப்பதாகவும் கருதப்படமாட்டார்.

(5) பதிவாளரின் கடமைகள் பின்வருமாறு,—

(a) அவர்தம் பொறுப்பில் செயலாட்சி மன்றம் ஒப்படைக்கிற இப்பள்ளியின் பதிவுக்கட்டுகளுக்கும், தனித்த இலச்சினைக்கும், பிற சொத்துக்கும் பாதுகாவலராக இருப்பது;

(b) பொது மன்றம், செயலாட்சி மன்றம், கல்வி மன்றம், புலங்கள், பாடக்குழுக்கள், தேர்வாளர் குழுமங்கள் மற்றும் இப்பள்ளியின் அதிகார அமைப்புகளினால் நியமிக்கப்படும் குழு ஏதொன்றின் கூட்டங்களையும் கூட்டுகிற அறிவிப்புகள் அனைத்தையும் அனுப்புவது;

(c) பொதுமன்றம், செயலாட்சி மன்றம், கல்வி மன்றம், புலங்கள், பாடக்குழுக்கள், தேர்வாளர் குழுமங்கள் மற்றும் இப்பள்ளியின் அதிகார அமைப்புகளினால் நியமிக்கப்படும் குழு ஏதொன்றின் கூட்ட நடவடிக்கைகள் அனைத்தையும் பற்றிய நடவடிக்கைக் குறிப்பேடுகளை வைத்து வருவது;

(d) பொதுமன்றத்தின் அலுவலகக் கடிதத் தொடர்பை நடத்திவருவது;

(e) இப்பள்ளியின் அதிகார அமைப்புகளின் கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரலின் படிகள் வெளியிடப்பட்டவுடன் அவற்றையும் அத்தகைய கூட்ட நடவடிக்கைகளின் குறிப்புகளையும் வேந்தருக்கு வழங்குவது; மற்றும்

(f) ஒழுங்குமுறை விதிகளில் குறித்துரைக்கப்படக்கூடிய அல்லது பொது மன்றத்தினாலோ செயலாட்சி மன்றத்தினாலோ அல்லது துணைவேந்தராலோ அவ்வப்போது கோரப்படக்கூடிய அத்தகைய பிற அதிகாரங்களைச் செலுத்தி வருவதும் அத்தகைய பிற கடமைகளை ஆற்றி வருவதுமாகும்.

(6) இப்பள்ளியினால் அல்லது அதற்கு எதிராகத் தொடரப்படும் உரிமை வழக்குகள் மற்றும் எடுக்கப்படும் பிற சட்ட நடவடிக்கைகள் அனைத்திலும், வாதுரைகள் பதிவாளரால் கையொப்பமிடப்பட்டு உண்மையென உறுதிமொழி அளிக்கப்படுதல் வேண்டும்; மற்றும் அத்தகைய உரிமை வழக்குகளிலும் நடவடிக்கைகளிலும் நீதிமுறைக் கட்டளைகள் அனைத்தும் பதிவாளருக்குப் பிறப்பிக்கப்பட்டு அவருக்குச் சார்வு செய்யப்படுதல் வேண்டும்.

**15.** (1) நிதி அலுவலர், இதன் பொருட்டு செயலாட்சி மன்றத்தால் குறித்துரைக்கப்படக்கூடிய அத்தகைய கால அளவுக்கு, அந்தச் செயலாட்சி மன்றத்தினால் நியமிக்கப்படும் இப்பள்ளியின் சம்பளம் பெறும் முழுநேர அலுவலராக இருந்துவருவார். நிதி அலுவலர்.

(2) நிதி அலுவலரின் நியமனம், அரசினால் பரிந்துரை செய்யப்படும் மூன்று பெயர்களைக் கொண்ட பட்டியல் ஒன்றிலிருந்து செயலாட்சி மன்றத்தால் செய்யப்படுதல் வேண்டும்.

(3) நிதி அலுவலரின் ஊதியங்களும், பணி குறித்த பிற வரையறைகளும் நிபந்தனைகளும், ஒழுங்கு முறை விதிகளின் மூலம் வகுத்துரைக்கப்படக்கூடியனவாக இருக்கும்.

(4) நிதி அலுவலர், ஐம்பத்தெட்டு வயதினை எய்தியதன்பேரில் அல்லது (1)—ஆம் உட்பிரிவின்படி செயலாட்சி மன்றத்தால் குறித்துரைக்கப்படும் கால அளவு முடிவடைவதன் பேரில், இவற்றில் எது முந்தியதோ அதன் பேரில் ஓய்வு பெறுதல் வேண்டும்:

**வரம்புரை**:ஆனால், நிதி அலுவலர் ஐம்பத்தெட்டு வயதினை எய்தியிருந்த போதிலும், பதவியில் அவரைத் தொடர்ந்து பின்வருபவர் நியமிக்கப்பட்டு, அவர் தம்முடைய பதவியை மேற்கொள்கின்ற வரையில் அல்லது ஓராண்டுக்காலம் முடிவடைவது வரையில் இவற்றில் எது முந்தியதோ அது வரையில், தொடர்ந்து பதவியில் இருந்துவருவார்.

(5) நிதி அலுவலரின் பதவி காலியாக இருக்கும்போது அல்லது நோய், பணிக்கு வாராமை என்கின்ற காரணத்தால் அல்லது பிற காரணம் எதனாலேனும், நிதி அலுவலர் தம்முடைய பதவிக் கடமைகளை ஆற்றுவதற்கு இயலாதவராக இருக்கும்போது, நிதி அலுவலரின் பதவிக் கடமைகள், அந்த நோக்கத்திற்காகத் துணை வேந்தரால் நியமிக்கப்படக்கூடிய அத்தகைய நபரால் ஆற்றி வரப்படுதல் வேண்டும்.

(6) நிதி அலுவலர், நிதிக்குழுவின் ***பதவிவழிச்*** செயலாளராக இருந்து வருவார்; ஆனால் அத்தகைய குழுவின் உறுப்பினராக இருப்பதாகக் கருதப்படமாட்டார்.

(7) நிதி அலுவலர்,–

(a) இப்பள்ளியின் நிதியங்களின் மீது பொதுவான கண்காணிப்பினைச் செலுத்துதல் வேண்டும்; மற்றும் இப்பள்ளியின் நிதிக்கொள்கை தொடர்பாக அதற்கு ஆலோசனை வழங்குதலும் வேண்டும்; மற்றும்

(b) செயலாட்சி மன்றத்தாலோ அல்லது நிதிக்குழுவினாலோ அவருக்கு ஒதுக்கியளிக்கப்படக்கூடிய அல்லது ஒழுங்குமுறை விதிகளால் வகுத்துரைக்கப்படக்கூடிய அத்தகைய பிற அதிகாரங்களைச் செலுத்தி வருதலும், அத்தகைய பிற நிதி சார்ந்த அலுவல்களை ஆற்றி வருதலும் வேண்டும்:

**வரம்புரை:**ஆனால், நிதி அலுவலர், செயலாட்சி மன்றத்தின் முன் ஒப்புதலளிப்பின்றி செலவு எதையும் செய்தலோ வகுத்துரைக்கப்படக்கூடிய அத்தகைய தொகைக்கு மேற்படும் முதலீடு எதையும் செய்தலோ கூடாது.

(8) செயலாட்சி மன்றத்தின் கட்டுப்பாட்டு அதிகாரத்திற்குட்பட்டு, நிதி அலுவலர்,–

(a) பொறுப்பாட்சி மற்றும் நிலைக்கொடைச் சொத்து உள்ளடங்கலாக, இப்பள்ளியின் சொத்தினையும், முதலீடுகளையும் வைத்துவருவதோடு நிருவகித்துவருதலும் வேண்டும்;

(b) ஓராண்டிற்கான தொடர் மற்றும் தொடராச் செலவினங்களுக்காக செயலாட்சி மன்றத்தால் நிர்ணயிக்கப்பட்ட வரம்புகளுக்கு மேற்படாதவாறும், பணங்கள் அனைத்தும் அவை வழங்கப்பட்ட அல்லது குறித்தொதுக்கப்பட்ட நோக்கங்களுக்காகச் செலவிடப்படுவதையும் உறுதி செய்துகொள்ளவேண்டும்;

(c) இப்பள்ளியின் ஆண்டுக் கணக்குகள், நிதி மதிப்பீடு, வரவு–செலவுத் திட்டம் ஆகியவற்றைத் தயாரிப்பதற்கும், பொது மன்றத்திடம் அவற்றை முன்னிடுவதற்கும் பொறுப்புடையவராவார்;

(d) பணம் மற்றும் வங்கி இருப்புகளையும், முதலீடுகளையும் இடைவிடாது கண்காணித்து வருதல் வேண்டும்;

(e) வருவாய் வசூலின் முன்னேற்றத்தைக் கண்காணித்து, வசூல் செய்வதற்குப் பயன்படுத்தப்படும் முறைகள் குறித்த ஆலோசனை வழங்குதல் வேண்டும்.

(f) கட்டடங்கள், நிலங்கள், அறைகலன்கள், சாதனங்கள் ஆகியவற்றின் பதிவேடுகள் நாளதுவரை வைத்துப் பேணிவரப்படுவதையும், இப்பள்ளியால் பேணிவரப்படும் அலுவலகங்கள், சிறப்பு மையங்கள் ஆகிய அனைத்திலுமுள்ள சாதனங்கள் மற்றும் பிற நுகரத்தக்க பொருள்களின் இருப்பு நிலையைச் சரிபார்க்கும் பணி நடத்தப்படுவதையும் உறுதி செய்து கொள்ளுதல் வேண்டும்;

(g) அதிகாரமளிக்கப்படாத செலவினம் குறித்து அல்லது பிற நிதிசார் முறைகேடு எதையும் குறித்துத் துணை வேந்தரின் கவனத்திற்குக் கொண்டுவருதல் வேண்டும்; மற்றும் தவறு செய்துள்ளவர் மீது எடுக்கப்படவேண்டிய உரிய நடவடிக்கை குறித்து ஆலோசனை கூறுதலும் வேண்டும்; மற்றும்

(h) தம்முடைய கடமைகளை ஆற்றிவருவதற்காகத் தாம் தேவையெனக் கருதக்கூடிய தகவல் அல்லது விவர அறிக்கை எதையும், இப்பள்ளியினால் பேணிவரப்படும் அலுவலகத்திலிருந்து அல்லது மையத்திலிருந்து கோரிப்பெறுதல் வேண்டும்.

(9) இப்பள்ளிக்குச் செலுத்தத்தக்க பணம் எதற்காகவும் நிதி அலுவலரோ அல்லது செயலாட்சி மன்றத்தால் இதற்கென உரியவாறு அதிகாரமளிக்கப்பட்ட நபர் அல்லது நபர்களோ அளிக்கும் பற்றுச்சீட்டானது, அத்தகையபணம் செலுத்தப்பட்டதற்கான போதிய நிறைவேற்றச் சான்றாகும்.

**16.** **(1)** தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலரின் பதவியை வகிப்பவர், பேராசிரியர் ஒருவரது படிநிலைக்குக் குறையாமல், சட்டம் பற்றிய துறையில் ஒரு கல்வியாளராக இருப்பவராக இருத்தல் வேண்டும். தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர்.

(2) தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர், வகுத்துரைக்கப்படக்கூடிய அத்தகைய கால அளவுக்கும், அத்தகைய வரையறைகள் மற்றும் நிபந்தனைகளின் பேரிலும், செயலாட்சி மன்றத்தால் நியமிக்கப்படும், இப்பள்ளியின் ஒரு முழுநேர அலவலராக இருந்துவருவார்.

(3) தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர், வகுத்துரைக்கப்படக்கூடிய அதிகாரங்களைச் செலுத்தி வருவதோடு, கடமைகளையும் ஆற்றி வருவார்.

**அத்தியாயம்–IV**

**பள்ளியின் அதிகார அமைப்புகள்.**

**17.** பொது மன்றம், செயலாட்சி மன்றம், கல்வி மன்றம், நிதிக்குழு, பாடக்குழுக்கள், புலங்கள் மற்றும் இப்பள்ளியின் அதிகார அமைப்புகளென ஒழுங்குமுறை விதிகளின் மூலம் விளம்பப்படக்கூடிய அத்தகைய பிற அதிகார அமைப்புகள் ஆகியவை இப்பள்ளியின் அதிகார அமைப்புகளாக இருக்கும். பள்ளியின் அதிகார அமைப்புகள்.

**18.** **(1)** நபர் எவரும், இப்பள்ளியின் அதிகார அமைப்புகளில் ஏதொன்றிற்கும் பெயர் குறித்து நியமிக்கப்படும் அல்லது தேர்ந்தெடுக்கப்படும் தேதியன்று,– உறுப்பினர் பதவிக்கான தகுதிக்கேடு.

(a) அவர் மனச் சீர்கேடுற்றவராகவோ, அல்லது

(b) ஒரு நொடிப்பு நிலையராக நீதிமுறையில் தீர்மானிக்கப்பட்ட நபர் ஒருவராக இருப்பாராயின் அல்லது விடுவிக்கப்படாத நொடிப்பு நிலையராக இருப்பாராயின், அல்லது

(c) ஒழுக்கக் கேட்டினை உள்ளடக்கிய குற்றச் செயலுக்காக, நீதிமன்றமொன்றினால் குற்றவாளியெனத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளவராக இருப்பாராயின், அவ்வாறு பெயர்குறித்து நியமிக்கப்படுவதற்கோ தேர்ந்தெடுக்கப்படுவதற்கோ தகுதியுடையவராகமாட்டார்.

(2) நபரொருவர், (1)–ஆம் உட்பிரிவின்படி தகுதிக்கேடுற்றவரா என்பது குறித்துப் பூசல் அல்லது ஐயம் ஏதேனும் இருக்கும் நேர்வில், செயலாட்சி மன்றமானது அதனைத் தீர்மானித்தல் வேண்டும்; அதன் முடிவே இறுதியானதாகும்.

**19.** (1) 21, 24 மற்றும் 28–ஆம் பிரிவுகளில் என்ன அடங்கியிருந்தபோதிலும், பள்ளியின் பின்வரும் அதிகார அமைப்புகளின் அதாவது:– ஒரு சிலநேர்வுகளில் பொது மன்றத்திற்கும் செயலாட்சி மன்றத்திற்கும் கல்வி மன்றத்திற்கும் தேர்ந்தெடுக்கப் படுவதற்கான அல்லது பெயர் குறித்து நியமிக்கப் படுவதற்கான தகுதிக்கேடு

(i) பொது மன்றம்,

(ii) செயலாட்சி மன்றம்; மற்றும்

(iii) கல்வி மன்றம் ஆகியவற்றில் ஏதாவதொன்றில் அல்லது அதற்கு மேற்பட்டவற்றில் மொத்தம் ஆறு ஆண்டுக்கால அளவுக்கு உறுப்பினராகப் பதவி வகித்து வந்திருந்த நபர் எவரும், மேற்சொன்ன மூன்று அதிகார அமைப்புகளில் ஏதொன்றிற்கும் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு அல்லது பெயர் குறித்து நியமிக்கப்படுவதற்குத் தகுதியுடையவராகமாட்டார்.

(2) (1)–ஆம் உட்பிரிவில் உள்ள எதுவும் 21, 24, 28 ஆகிய பிரிவுகளில் குறிப்பிடப்பட்ட பதவி–வழி உறுப்பினர்களுக்குப் பொருந்துதல் கூடாது.

துணை வேந்தர் மற்றும் பிற அலுவலர்கள் முதலானோர் பொது ஊழியர்களாக இருப்பர் எனல்.

**20.** துணைவேந்தர், பதிவாளர், நிதி அலுவலர், தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர் மற்றும் இப்பள்ளியின் பிற பணியாளர்கள், இந்தச் சட்டத்தின் வகைமுறைகளில் எதனையும் ஒட்டிச் செயற்படுகிறபோது அல்லது செயற்படுவதாகப் புலப்படுகின்றபோது, இந்தியத் தண்டனைத் தொகுப்புச் சட்டத்தின் 21–ஆம் பிரிவின் பொருளின்படி பொது ஊழியர்களாகக் கொள்ளப்படுதல் வேண்டும். மையச் சட்டம் XLV/1860.

**பொது மன்றம்.**

**21.** (1) பொது மன்றமானது, இப்பள்ளியின் தலைமை ஆலோசனைக் குழுமமாகும். பொதுமன்றம்.

(2) வேந்தரானவர், 51–ஆம் பிரிவின்படி, முதல்–துணை வேந்தர் நியமிக்கப்பட்டதற்குப் பின்பு, கூடிய விரைவில், பொது மன்றத்தை அமைத்துருவாக்குதல் வேண்டும்.

(3) பொது மன்றமானது வேந்தர், இணைவேந்தர், துணைவேந்தரோடு கூட பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும் அதாவது:–

**வகை I–பதவி வழி உறுப்பினர்கள்**

(a) தமிழ்நாடு அரசுத் தலைமை வழக்குரைஞர்;

(b) தமிழ்நாடு வழக்குரைஞர் மன்றத் தலைவர்;

(c) தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத் துணைவேந்தர்;

(d) சட்டத் துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசுச் செயலாளர்;

(e) உயர் கல்வித் துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசுச் செயலாளர்;

(f) நிதித் துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசுச் செயலாளர்.

**வகை–II.**

**பிற உறுப்பினர்கள்.**

(a) வேந்தரால் பெயர்குறித்து நியமிக்கப்படும், சென்னை உயர் நீதிமன்றத்தின் பணியில் இருக்கும் நீதிபதி ஒருவர் மற்றும் ஓய்வு பெற்ற நீதிபதி ஒருவர்;

(b) துணைவேந்தரால் பெயர்குறித்து நியமிக்கப்படும் இப்பள்ளியின் இரண்டு பேராசிரியர்கள்;

(c) இப்பள்ளியிலிருந்து அல்லாமல் பிறவாறு, சட்டப் புலத்தில் இருபது ஆண்டுகளுக்குக் குறையாத கற்பித்தல் அனுபவமுடைய, துணைவேந்தரால் பெயர் குறித்து நியமிக்கப்படும் இரண்டு பேராசிரியர்கள்;

(d) வேந்தரால் பெயர் குறித்து நியமிக்கப்படும், இந்திய வழக்குரைஞர் மன்றத்தின் உறுப்பினர் ஒருவர்;

(e) வேந்தரால் பெயர் குறித்து நியமிக்கப்படும் முதுநிலை வழக்குரைஞர் ஒருவர்.

(4) வேந்தரானவர் பொதுமன்றத்தின் தலைமையாளராக இருப்பார்;

(5) (a) வேறுவிதமாக வகைசெய்யப்பட்டவாறலல்லாமல், ***பதவி வழி*** உறுப்பினர்கள் அல்லாத பொது மன்றத்தின் பிற உறுப்பினர்கள், மூன்றாண்டுக் காலஅளவிற்குப் பதவி வகித்துவருவர்; மற்றும் அத்தகைய உறுப்பினர்கள், மற்றொரு மூன்றாண்டுக் காலஅளவிற்கு மேற்படாத கால அளவிற்குப் பெயர் குறித்து நியமிக்கப்படுவதற்குத் தகுதியுடையவர்கள் ஆவர்.

(b) உறுப்பினர் ஒருவர், பொது மன்றத்திற்குத் தற்காலிகக் காலியிடமொன்றுக்குப் பெயர் குறித்து நியமிக்கப்பட்டிருக்கின்றவிடத்து அத்தகைய உறுப்பினர் எவராலும் ஓராண்டுக்கால அளவிற்குக் குறையாமல் வகித்துவரப்பட்ட பதவியின் கால அளவானது முழு மூன்றாண்டுக் காலஅளவாகக் கொள்ளப்படும்:

**முதலாம் வரம்புரை.–** ஆனால், குறிப்பிட்ட வாக்காளர் தொகுதியின் அல்லது அமைப்பின் உறுப்பினர் என்கிற அல்லது குறிப்பிட்ட நியமனம் ஒன்றை வகிக்கிறவர் என்கிற தம் தகுதியில் பெயர்குறித்து நியமிக்கப்பட்டுள்ள பொது மன்றத்தின் உறுப்பினரொருவர், அவர் அந்த வாக்காளர் தொகுதியின் அல்லது அமைப்பின் உறுப்பினராக அல்லது, நேர்விற்கேற்ப, அந்த நியமனத்தை வகித்துவருபவராக இருப்பதனின்று அற்றுப்போகிற தேதியிலிருந்து, பொது மன்றத்தின் உறுப்பினராக இருப்பதனின்றும் அற்றுப்போவார்:

**இரண்டாம் வரம்புரை.–** மேலும், பொது மன்றத்தின் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர், பொது மன்றத்தின் பதவிவழி உறுப்பினராக இருப்பதற்கு உரிமைத் தகுதியுடையவர் என்ற காரணத்தால் பதவிகளில் எதற்கும் தற்காலிகமாக நியமிக்கப்படுகிறவிடத்து, தாம் தேர்ந்தெடுக்கப்பட்டதன் காரணமாக அல்லது பெயர் குறித்து நியமிக்கப்பட்டதன் காரணமாக பொதுமன்றத்தின் உறுப்பினராகத் தாம் தொடர்ந்து இருப்பதற்கு விரும்புகிறாரா அல்லது அத்தகைய உறுப்பினராக இருக்கும் பதவியைவிட்டு நீங்கித் தாம் நியமிக்கப்பட்டதன் காரணமாகப் பதவிவழி உறுப்பினராக ஆவதற்கு விரும்புகிறாரா என்பதை அவர் தன் நியமனப்பொறுப்பை மேற்கொள்கின்ற தேதியிலிருந்து ஏழு நாட்களுக்குள்ளாக தம்மால் கையொப்பமிட்டு துணை வேந்தருக்குத் தெரிவிக்கப்பட்ட எழுத்து மூலமான அறிவிப்பின் வாயிலாகத் தெரிவு செய்தல் வேண்டும்; மற்றும் அந்த விருப்பத்தெரிவே அறுதியானதாகும். அத்தகைய விருப்பத்தெரிவைச் செய்யத் தவறுவதன்பேரில், தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது பெயர்குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினராக உள்ள தம்முடைய பதவியைவிட்டு அவர் நீங்கியிருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(6) ஒருவர் பொது மன்றத்தின் உறுப்பினராக இருப்பது அற்றுப்போகும்போது, அவர் பொது மன்றத்தில் தாம் உறுப்பினராக இருப்பதன் காரணத்தால் இப்பள்ளியின் அதிகார அமைப்புகளில் எதிலேனும் உறுப்பினராக இருந்திருக்கக்கூடிய நிலையும் அற்றுப்போகும்.

(7) பதவி வழி உறுப்பினர் அல்லாத பொது மன்றத்தின் ஓர் உறுப்பினர், தமது பதவிக்காலம் முடிவதற்கு முன்பு எந்த நேரத்திலும், தமது உறுப்பினர் பதவியிலிருந்து பதவிவிலகலைக் கொடுக்கலாம்; அத்தகைய பதவி விலகலானது அவ்வுறுப்பினரால் எழுத்துருவிலான கடிதமொன்றின் வாயிலாக வேந்தருக்குத் தெரிவிக்கப்படுதல் வேண்டும்; மற்றும் அப்பதவி விலகலானது, வேந்தரால் அது ஏற்கப்படும் தேதியிலிருந்து செயல்விளைவு பெறுதல் வேண்டும்.

பொது மன்றத்தின் அதிகாரங்கள்.

**22.** பொது மன்றமானது, பின்வரும் அதிகாரங்களைக் கொண்டிருத்தல் வேண்டும், அவையாவன:–

(a) பள்ளியின் விரிவான கொள்கைகளையும், செயற்திட்டங்களையும், அவ்வப்போது ஆய்வு செய்தல்; மற்றும் பள்ளியின் மேம்பாட்டிற்கும் வளர்ச்சிக்குமான நடவடிக்கைகளுக்கு ஆலோசனை கூறுதல்.

(b) ஆண்டறிக்கைகள், நிதியியல் மதிப்பீடுகள் மற்றும் அத்தகைய கணக்குகளின் மீதான தணிக்கை அறிக்கைகள் ஆகியவற்றை பரிசீலனை செய்து அவற்றின் மீது தீர்மானங்களை நிறைவேற்றுதல்; மற்றும்.

(c) இப்பள்ளியின் திறம்பட்ட செயற்பாட்டிற்கும், நிருவாகத்திற்கும் தேவையென அது கருதுகிற அத்தகைய பிற அலுவல்களைச் செய்தல்.

பொதுமன்றத்தின் கூட்டங்கள்.

**23. (1)** பொது மன்றம், குறைந்தது ஆண்டுக்கு ஒரு முறையேனும் கூடுதல் வேண்டும். ஆண்டு எதனையும் பொறுத்து, பொது மன்றத்தினால் வேறு பிற தேதி நிர்ணயிக்கப்பட்டிருந்தாலன்றி, பொது மன்றத்தின் ஆண்டு கூட்டம் ஒன்று செயலாட்சி மன்றத்தினால் நிர்ணயிக்கப்படும் தேதியில் நடத்தப்படுதல் வேண்டும்.

(2) அதனுடைய ஆண்டுக் கூட்டத்தில், வரவுகள் மற்றும் செலவினங்களின் விவரவுரை, தணிக்கை செய்யப்பட்ட ஐந்தொகைக்குறிப்பு மற்றும் நிதியியல் மதிப்பீடுகளுடன் சேர்த்து, முந்தைய ஆண்டின் போதான பள்ளியின் பணி குறித்த அறிவிக்கையானது துணை வேந்தரால் பொது மன்றத்திடம் முன்னிடப்படுதல் வேண்டும்.

(3) பொது மன்றத்தின் கூட்டங்கள், தலைமையாளரால் அல்லது அவர் வாராதிருக்கும்போது துணைவேந்தரால், அவராக முற்பட்டோ, பொதுமன்றத்தின் உறுப்பினர்களில் பத்திற்குக் குறையாதவர்களின் கோரிக்கையின் பேரிலோ, கூட்டப்படுதல் வேண்டும்.

(4) பொது மன்றத்தின் கூட்டம் ஒவ்வொன்றிற்கும் பதினைந்து நாட்கள் அறிவிப்பு கொடுக்கப்படுதல் வேண்டும்.

(5) பொது மன்றத்தின் மூன்றில் ஒரு பங்கு உறுப்பினர்கள் குறைவெண் வரம்பாக இருத்தல் வேண்டும்.

(6) உறுப்பினர் ஒவ்வொருவரும் ஒரு வாக்கினைக் கொண்டிருப்பார் மற்றும் பொது மன்றத்தினால் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சினை எதிலும் வாக்குகள் சமமாக இருக்குமாயின், தலைமையாளர் அல்லது கூட்டத்திற்கு தலைமை வகிக்கும் நபர், கூடுதலாக அறுதி செய்யும் வாக்கு ஒன்றினைக் கொண்டிருப்பார்.

(7) உறுப்பினர்களுக்கிடையே கருத்து வேறுபாடு இருக்கிற நேர்வில் பெரும்பான்மையினரின் கருத்து மேலோங்கி இருக்கும்.

(8) பொதுக்குழுவினால் அவசரமான நடவடிக்கை எடுப்பது தேவையாயிருக்குமாயின், தலைமையாளர், பொது மன்றத்தின் உறுப்பினர்களுக்கு இது குறித்து விவரங்கள் அடங்கிய தாள்களைச் சுற்றுக்கு அனுப்புவதன் வாயிலாக அலுவல் நடத்தப்படுவதற்கு அனுமதிக்கலாம். கருதப்பட்ட நடவடிக்கை எதுவும், பொது மன்றத்தின் உறுப்பினர்களில் பெரும்பான்மை ஒன்றினால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தாலன்றி, எடுத்துக்கொள்ளப்படுதல் ஆகாது. அவ்வாறு எடுக்கப்பட்ட நடவடிக்கை பொது மன்றத்தின் உறுப்பினர்கள் அனைவருக்கும் உடனடியாகத் தெரிவிக்கப்படுதல் வேண்டும் மற்றும் இது குறித்த விவரத் தாள்கள் உறுதி செய்யப்படுவதற்காக பொது மன்றத்தின் அடுத்த கூட்டத்தில் வைக்கப்படுதல் வேண்டும்.

**செயலாட்சி மன்றம்.**

செயலாட்சி மன்றம்.

**24.** (1) செயலாட்சி மன்றமானது பள்ளியின் தலைமைச் செயலாட்சிக் குழுமமாக இருக்கும்.

(2) பள்ளியின் நிருவாகம், மேலாண்மை அதன் கட்டுப்பாடு மற்றும் அதனின் வருவாய் செயலாட்சி மன்றத்திடம் உற்றமைந்திருக்கும். அதுவே பள்ளியின் சொத்து மற்றும் நிதியங்களை கட்டுப்படுத்தவும் மற்றும் நிருவகிக்கவும் செய்யும்.

(3) செயலாட்சி மன்றமானது, பின்வரும் பதவிவழி மற்றும் பிற உறுப்பினர்களைக் கொண்டிருக்கும், அதாவது:–

**வகை I– பதவி வழி உறுப்பினர்கள்.**

(a) துணை வேந்தர்;

(b) தமிழ்நாடு அரசுத் தலைமை வழக்குரைஞர்;

(c) பள்ளியின் துறைகளின் தலைவர்கள்;

(d) சட்டத்துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசுச் செயலாளர்;

**வகை II பிற உறுப்பினர்கள்.**

(a) வேந்தரால் பெயர் குறித்து நியமிக்கப்படும், சென்னை உயர்நீதிமன்றத்தின் பணியிலிருக்கும் நீதிபதி ஒருவர் அல்லது ஓய்வு பெற்ற நீதிபதி ஒருவர்;

(b) வேந்தரால் பெயர் குறித்து நியமிக்கப்படும், தமிழ்நாடு வழக்குரைஞர் மன்றத்தின் உறுப்பினர் இருவர்;

(c) புகழ் வாய்ந்த முதுநிலை வழக்குரைஞர்களுக்கிடையேயிருந்து வேந்தரால் பெயர் குறித்து நியமிக்கப்படும் உறுப்பினர்கள் இருவர்;

(d) தமிழ்நாடு சட்டமன்றப்பேரவையின் உறுப்பினர்களுக்கிடையேயிருந்து அரசால் பெயர் குறித்து நியமிக்கப்படும் உறுப்பினர் ஒருவர்;

(e) பள்ளியின் கல்வி கற்பிக்கும் பணியாளர் தொகுதியிலிருந்து அவர்களால் தேர்ந்தெடுக்கப்படும் பேராசிரியர்கள் மூவர்.

(4). (a) வேறுவிதமாக வகைசெய்யப் பட்டவாறல்லாமல், தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது பெயர் குறித்து நியமனஞ்செய்யப்பட்ட செயலாட்சி மன்றத்தின் உறுப்பினர்கள் மூன்றாண்டுக் கால அளவிற்குப் பதவி வகித்துவருவர்; மற்றும் அத்தகைய உறுப்பினர்கள், மற்றொரு மூன்றாண்டுக் காலஅளவிற்கு மேற்படாத கால அளவிற்குத் தேர்ந்தெடுக்கப்படுவற்கு அல்லது பெயர் குறித்து நியமிக்கப்படுவதற்குத் தகுதியுடையவர்கள் ஆவர்.

(b) உறுப்பினர் ஒருவர், செயலாட்சி மன்றத்திற்கான தற்காலிகக் காலியிடத்திற்குத் தேந்தெடுக்கப்பட்டிருக்கிற அல்லது பெயர் குறித்து நியமிக்கப்பட்டிருக்கிறவிடத்து, அத்தகைய உறுப்பினர் எவராலும் ஓராண்டுக் காலஅளவிற்குக் குறையாமல் வகித்துவரப்பட்ட பதவியின் கால அளவு முழு மூன்றாண்டுக் காலஅளவாகக் கொள்ளப்படும்:

**முதலாம் வரம்புரை.–** ஆனால், குறிப்பிட்ட வாக்காளர் தொகுதியின் அல்லது அமைப்பின் உறுப்பினர் என்கிற அல்லது குறிப்பிட்ட நியமனம் ஒன்றை வகிக்கிறவர் என்கிற தம் தகுதியில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள அல்லது பெயர்குறித்து நியமிக்கப்பட்டுள்ள செயலாட்சி மன்றத்தின் உறுப்பினரொருவர், அவர் அந்த வாக்காளர் தொகுதியின் அல்லது அமைப்பின் உறுப்பினராக அல்லது, நேர்விற்கேற்ப அந்த நியமனத்தை வகித்துவருபவராக இருப்பதனின்று அற்றுப்போகிற தேதியிலிருந்து, செயலாட்சி மன்றத்தின் உறுப்பினராக இருப்பதனின்றும் அற்றுப்போவார்:

**இரண்டாம் வரம்புரை.–** மேலும், செயலாட்சி மன்றத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது பெயர்குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர், எந்தப் பதவியின் காரணமாக செயலாட்சி மன்றத்தின் பதவிவழி உறுப்பினராக இருப்பதற்கு அவர் உரிமைத்தகுதியுடையவராயிருக்கின்றாரோ, அந்தப் பதவிகளில் எதற்கேனும் தற்காலிகமாக நியமிக்கப்படுகிறவிடத்து, தாம் தேர்ந்தெடுக்கப்பட்டதன் காரணமாக அல்லது பெயர் குறித்து நியமிக்கப்பட்டதன் காரணமாக, செயலாட்சி மன்றத்தின் உறுப்பினராகத் தாம் தொடர்ந்து இருப்பதற்கு விரும்புகிறாரா அல்லது அத்தகைய உறுப்பினராக இருக்கும் பதவியைவிட்டு நீங்கித் தாம் நியமிக்கப்பட்டதன் காரணமாகப் பதவிவழி உறுப்பினராக ஆவதற்கு விரும்புகிறாரா என்பதை, அவர் தன் நியமனப்பொறுப்பை மேற்கொள்கின்ற தேதியிலிருந்து ஏழு நாட்களுக்குள்ளாக தம்மால் கையொப்பமிட்டு துணை வேந்தருக்குத் தெரிவிக்கப்பட்ட எழுத்து மூலமான அறிவிப்பின் வாயிலாகத் தெரிவு செய்தல் வேண்டும்; மற்றும் அந்த விருப்பத்தெரிவே அறுதியானதாகும். அத்தகைய விருப்பத்தெரிவைச் செய்யத் தவறுவதன்பேரில், தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது பெயர்குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினராக உள்ள தம்முடைய பதவியைவிட்டு அவர் நீங்கியிருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(5) நபர் ஒருவர் செயலாட்சி மன்றத்தின் உறுப்பினராக இருப்பது அற்றுப்போகும்போது, அவர் செயலாட்சி மன்றத்தில் தாம் உறுப்பினராக இருப்பதன் காரணத்தால் இப்பள்ளியின் அதிகார அமைப்புகளில் எதிலேனும் உறுப்பினராக இருந்திருக்கக்கூடிய நிலையும் அற்றுப்போகும்.

(6) செயலாட்சி மன்றத்தின் உறுப்பினர்கள், வகுத்துரைக்கப்படக்கூடிய அத்தகைய நாள்படிகள் மற்றும் பயணப்படிகள் தவிர, பள்ளியிடமிருந்து ஊதியம் எதையும் பெறுவதற்கு உரிமை தகுதியுடையவர்கள் ஆக மாட்டார்கள்:

**<u>வரம்புரை:</u>** ஆனால், இந்த உட்பிரிவில் அடங்கியுள்ள எதுவும், உறுப்பினர் எவரையும் தாம் வகிக்கிற பதவியின் காரணமாக, தாம் உரிமைத் தகுதியுடையவராயிருக்கிற தம்முடைய வழக்கமான ஊதியங்களைப் பெறுவதைத் தடை செய்தல் ஆகாது.

(7) செயலாட்சி மன்றத்தின் பதவிவழி உறுப்பினர் அல்லாத பிற உறுப்பினர் ஒருவர், தமது பதவி முடிவடைகிற கால அளவிற்கு முன்பு எந்த சமயத்திலும் தம்முடைய உறுப்பினர் பதவியைவிட்டு விலகலாம். அத்தகைய பதவி விலகலானது, அவ்வுறுப்பினரால் வேந்தருக்கு எழுத்து மூலமான கடிதம் ஒன்றின் வாயிலாகத் தெரிவிக்கப்படுதல் வேண்டும்; மற்றும் அப்பதவி விலகலானது, வேந்தரால் அது ஏற்கப்படும் தேதியிலிருந்து நடைமுறைக்கு வரும்.

செயலாட்சி மன்றத்தின் அதிகாரங்கள்.

**25.** செயலாட்சி மன்றத்தின் அதிகாரங்களாவன.—

(a) ஒழுங்குமுறை விதிகளைச் செய்தல் மற்றும் அந்த ஒழுங்குமுறை விதிகளைத் திருத்துதல் அல்லது நீக்குதல்;

(b) இப்பள்ளியின் சொத்துக்கள் மற்றும் நிதியங்களை வைத்துவருதல், கட்டுப்பாடு செய்தல், நிருவகித்துவருதல்;

(c) தான் பொருத்தமெனக் கருதக் கூடிய பல்வேறு சட்டப்புலங்களில் அத்தகைய கல்விப் பிரிவுகளில் கற்பிப்பதற்கும் பயிற்றுவிப்பதற்கும் வகை செய்தல்;

(d) இப்பள்ளி தான் பொருத்தமெனக் கருதக்கூடிய பல்வேறு சட்டப்புலங்களின் அத்தகைய கல்விப் பிரிவுகளில் படிப்புத் துறைகளை ஏற்படுத்துதல்;

(e) சட்டத்தின் பல்வேறு புலங்களில் ஆராய்ச்சி செய்வதற்கும், மேம்பாடு செய்வதற்கும், அறிவைப் பரப்புவதற்கும் வகை செய்தல்;

(f) இப்பள்ளிக்குத் தேவைப்படும் பேராசிரியர் பதவிகள் மற்றும் பிற கற்பித்தல் பதவிகளை ஏற்படுத்துதல்;

(g) பட்டங்கள் மற்றும் பிற கல்விச் சிறப்புகள் ஆகியவற்றை ஏற்படுத்துதல்;

(h) பட்டங்கள் மற்றும் பிற கல்வி சிறப்புகள் ஆகியவற்றை—

(i) கல்லூரியொன்றில் அல்லது ஒப்புதலளிக்கப்பட்டுள்ள கல்வி நிலையமொன்றில் ஒப்புதலளிக்கப்பட்ட குறித்தகாலப் படிப்பு அல்லது பயிற்சியைத் தொடர வேண்டியிருப்பதினின்று ஒழுங்கு முறை விதிகளால் வகுத்துரைக்கப்பட்டுள்ள முறையில் விலக்களிக்கப்பட்டிருந்தாலன்றி, அவ்வாறு தொடரவேண்டியிருந்து இப்பள்ளியால் வகுத்துரைக்கப்பட்டுள்ள தேர்வுகளில் தேர்ச்சிப்பெற்றுள்ள நபர்களுக்கு; அல்லது

(ii) ஒழுங்குமுறை விதிகளால் வகுத்துரைக்கப்பட்ட நிபந்தனைகளின்படி ஆராய்ச்சி செய்துவருகின்ற நபர்களுக்கு வழங்குதல்.

(i) பொது மன்றத்தின் உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கிற்குக் குறையாதவர்களின் பரிந்துரையின் பேரில், மதிப்புறு பட்டங்கள் அல்லது பிற மதிப்புறு சிறப்புகள் ஆகியவற்றை வழங்குதல்;

(j) ஆண்டு அறிக்கை, ஆண்டுக் கணக்குகள், நிதி மதிப்பீடுகள் ஆகியவற்றைப் பரிசீலனை செய்தல் மற்றும் அவற்றின் மீது அது தக்கதெனக் கருதும் நடவடிக்கையை எடுத்தல்;

(k) இப்பள்ளியின் துறைகளில் உள்ள ஆசிரியர்களின் தகுதிப்பாடுகளை வகுத்துரைத்தல்;

(l) பள்ளியின் ஆசிரியர்களை நியமிக்கின்ற நோக்கத்திற்காக அமைக்கப்பட்டுள்ள நிபுணர் தேர்வுக் குழுவின் பரிந்துரையின்பேரில் அவர்களை நியமித்தல் மற்றும் அவர்களுடைய ஊதியங்களை நிர்ணயித்தல், அவர்களுடைய கடமைகளையும், பணி நிபந்தனைகளையும் வரையறுத்தல் மற்றும் தற்காலிகக் காலியிடங்களை நிரப்புவதற்கு வகை செய்தல்;

(m) நிருவாக மற்றும் அது போன்ற பிற பதவிகளுக்கு நபர்களுக்கான நியமன முறையைக் குறித்துரைக்கின்ற ஒழுங்கு முறை விதிகளைச் செய்தல்; தற்காலிகக் காலியிடங்களை நிரப்புவதற்கு வகை செய்தல்; மற்றும் அவற்றினுடைய கடமைகளையும் மற்றும் பணி குறித்த வரையறைகளையும் நிபந்தனைகளையும் வரையறுத்தல்.

(n) இப்பள்ளியின் ஆசிரியர்கள் மற்றும் பிற பணியாளர்களுக்கு எதிராக ஒழுங்குமுறை விதிகளால் வகுத்துரைக்கப்படும் முறையில் ஒழுங்குமுறை நடவடிக்கை எடுப்பதற்கும் ஒழுங்குமுறை விதிகளில் குறித்துரைக்கப்படக்கூடிய அத்தகைய தண்டனைகளை விதிக்கவும் விசாரணை நிலுவையிலிருக்கையில் அவர்களை தற்காலிகப் பணி நீக்கம் செய்வதற்கும்;

(o) இப்பள்ளியின் துறைகள் அனைத்திலும் ஆய்வு செய்வதற்கு தேவையெனக் கருதப்படக்கூடிய அத்தகைய நடவடிக்கையை எடுப்பதற்கும்;

(p) மைய அல்லது மாநில அரசு எதனிடமிருந்தோ அல்லது மைய அல்லது மாநில அரசு எதற்கேனும் சொந்தமான அல்லது அதன் கட்டுப்பாட்டிலுள்ள நிறுவனம் எதனிடமிருந்தோ அல்லது பொது மக்களிடமிருந்தோ இப்பள்ளியின் சார்பாக, கடனாகப் பணத்தைத் திரட்டுவதற்கும்;

(q) இப்பள்ளியின் நோக்கங்களுக்காக, இப்பள்ளியின் சொத்தினுடைய பிணையத்தின் பேரில், அரசின் ஒப்புதலளிப்புடன் பணத்தைக் கடன் வாங்குவதற்கும்;

(r) பாடக்குழுக்களின் பரிந்துரையின் பேரில், தேர்வாளர்களை நியமிப்பதற்கும், அவர்களுடைய ஊதியங்களை நிர்ணயிப்பதற்கும்;

(s) ஒழுங்குமுறை விதிகளால் வகுத்துரைக்கக்கூடிய அத்தகைய கட்டணங்களை விதிப்பதற்கும் வசூலிப்பதற்கும்;

(t) இப்பள்ளியில் தேர்வுகளை நடத்துவதற்கும் அத்தேர்வுகளின் முடிவுகளுக்கு ஏற்பளிப்பு வழங்குவதற்கும் வெளியிடுவதற்கும்;

(u) பாடக் குழுக்களுக்கு உறுப்பினர்களை நியமிப்பதற்கும்;

(v) இப்பள்ளியில் மாணவர்களைச் சேர்த்துக் கொள்வது தொடர்பாக பள்ளித்தேர்வுகளுக்குச் சமமானதாய் உள்ளதென ஏற்பிசைவு அளிக்கப்பட வேண்டிய தேர்வுகளை வகுத்துரைப்தற்கான ஒழுங்கு முறை விதிகளைச் செய்வதற்கும்;

(w) மாணவர் விடுதிகளை நிறுவியமைத்து பேணி வருவதற்கும்;

(x) இப்பள்ளி மாணவர்களின் இருப்பிடத்தைக் கண்காணிப்பதற்கும் அவர்களின் உடல் நலத்தையும் பொது நலத்தையும் பேணுவதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கும்;

(y) பட்டதாரி உதவித் தொகைகள், பட்டதாரி பயண உதவித்தொகைகள், மாணவர் உதவித் தொகைகள், பதக்கங்கள் மற்றும் பரிசுகளை ஒழுங்குமுறை விதிகளுக்கு இணங்கிய வகையில் வழங்குதற்கும்;

(z) இப்பள்ளியால் நிறுவப்பட்ட நூல்வெளியீட்டுக் கழகம், வேலை வாய்ப்புக் கழகம், பள்ளி விளையாட்டுகள் அல்லது தடகளச் சங்கங்கள் ஆகியவற்றை மேலாண்மை செய்வதற்கும்;

(aa) இப்பள்ளியின் போதனை செய்தலையும் கற்பித்தலையும் மறு ஆய்வு செய்வதற்கும்;

(bb) இப்பள்ளிக்குள் ஆராய்ச்சியை வளர்ப்பதற்கும் அத்தகைய ஆராய்ச்சி பற்றி அவ்வப்போது அறிக்கைகளைக் கோருவதற்கும்;

(cc) திட்டவட்டமான நோக்கங்களுக்காக இப்பள்ளியின் பொறுப்பில் விடப்பட்டுள்ள சொத்துக்கள், நிதியங்கள் அனைத்தையும் அனைத்தையும் நிருவகிப்பதற்கும்;

(dd) இப்பள்ளிக்கு அளிக்கப்படும் நிலைக்கொடைகள், உயில் வழிக்கொடைகள், நன்கொடைகள், மானியங்கள், மற்றும் அதற்கு உரிமை மாற்றங்கள் மூலமாக அளிக்கப்படும் அசையும் அல்லது அசையாச் சொத்துக்களை இப்பள்ளியின் சார்பாக ஏற்றுக்கொள்வதற்கும்;

(ee) தன் அதிகாரங்களில் எதையும் துணைவேந்தருக்கோ, அல்லது தன் உறுப்பினர்களுக்கிடையே இருந்து அமைந்த குழு ஒன்றிற்கோ அல்லது ஒழுங்குமுறை விதிகளுக்கு இணங்க நியமிக்கப்பட்ட குழு ஒன்றிற்கோ ஒப்படைவு செய்வதற்கு அதிகாரம் பெற்றிருக்கும்.

செயலாட்சி மன்றத்தின் கூட்டங்கள்.

**26.** (1) செயலாட்சி மன்றமானது, அத்தகைய காலங்களிலும் இடங்களிலும், குறைந்தது இரண்டு மாதங்களுக்கு ஒரு முறையேனும் கூடுதல் வேண்டும் மற்றும் (2)–ஆம் மற்றும் (3)–ஆம் உட்பிரிவுகளின் வகைமுறைகளுக்கு உட்பட்டு, ஒழுங்கு முறை விதிகளில் வகுத்துரைக்கப்படக்கூடியவாறு கூட்டங்களின் குறைவெண் உள்ளடங்கலாக, அதன் கூட்டங்களின் அலுவல்களை நடத்துவது குறித்த நடைமுறை விதிகளைக் கடைப்பிடித்தல் வேண்டும்.

(2) துணை வேந்தர் அல்லது அவர் வராததின் பேரில், வந்திருக்கும் உறுப்பினர்களால் தெரிந்தெடுக்கப்படும் உறுப்பினர் எவரும் செயலாட்சி மன்றத்தின் கூட்டத்தில் தலைமை வகித்தல் வேண்டும்.

(3) செயலாட்சி மன்றத்தின் கூட்டம் எதிலுமுள்ள பிரச்சினைகள் அனைத்தும், வந்திருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் பெரும்பான்மையால் முடிவு செய்யப்படுதல் வேண்டும்; மற்றும் வாக்குகள் சமமாக இருக்கும் நேர்வில், துணைவேந்தர் அல்லது நேர்விற்கேற்ப தலைமை வகிக்கும் உறுப்பினர், இரண்டாம் அல்லது அறுதி செய்யும் ஒன்றைப் பெற்றிருப்பதோடு அதனைப் பயன்படுத்தல் வேண்டும்.

(4) பதவி வழி உறுப்பினராக இருக்கிற, சட்டத்துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசுச் செயலாளர் எந்த காரணத்தாலேனும் செயலாட்சி மன்றத்தின் கூட்டத்திற்கு வருகை தருவதற்கு இயலாதிருக்கின்ற நேர்வில், அரசுத் துணைச் செயலாளரின் படிநிலைக்கு குறையாத, அவருடைய துறையினைச் சேர்ந்த அலுவலர் ஒருவரை அக்கூட்டத்திற்கு வருகை தர அனுப்பி வைக்கலாம்; மற்றும் அவ்வாறு அனுப்பி வைக்கப்பட்ட அலுவலர், கூட்ட நடவடிக்கைகளில் பங்கேற்பதற்கு உரிமை கொண்டவராகவும், வாக்களிப்பதற்கு உரிமைகொண்டவராகவும் இருப்பார்.

(5) செயலாட்சி மன்றமானது, கலந்தாய்வு செய்யும் நோக்கத்திற்காக, பரிசீலனையிலுள்ள பொருள் எதிலும் சிறப்பறிவு அல்லது நடைமுறைப் பட்டறிவு உடைய நபர் எவரையும் கூட்டம் எதற்கும் வருகை தருமாறு அழைக்கலாம். அத்தகைய நபர் அத்தகைய கூட்ட நடவடிக்கைகளில் பேசலாம், மற்றும் பிறவாறு பங்கெடுத்துக் கொள்ளலாம்; ஆனால், வாக்களிப்பதற்கு உரிமைத்தகுதியுடையவராக மாட்டார். அவ்வாறு அழைக்கப்பட்ட நபர் செயலாட்சி மன்றத்தின் உறுப்பினரொருவருக்கு அனுமதிக்கப்படத்தக்க அத்தகைய நாள்படிகள் மற்றும் பயணப்படிகளுக்கு உரிமைத்தகுதியுடையவர் ஆவார்.

உறுப்பினர்கள் ஊதியத்திற்கு உரிமைத் தகுதியுடையவராக மாட்டார்கள் எனல்.

**27.** செயலாட்சி மன்றத்தின் உறுப்பினர்கள் ஒழுங்குமுறை விதிகளால் வகுத்துரைக்கப்படக்கூடிய பயணப்படிகள் மற்றும் அத்தகைய நாள்படிகள் தவிர பள்ளியிடமிருந்து ஊதியம் எதையும் பெறுவதற்கு உரிமைத் தகுதியுடையவராக மாட்டார்கள்:

**வரம்புரை**: ஆனால், இந்தப் பிரிவில் அடங்கியுள்ள எதுவும் உறுப்பினர் எவரையும் தாம் வகிக்கின்ற பதவியின் காரணமாக தாம் உரிமைத் தகுதியுடையவராயிருக்கின்ற தம்முடைய ஊதியங்களைப் பெறுவதைத் தடை செய்தலாகாது.

**கல்வி மன்றம்.**

**28.** கல்வி மன்றமானது, பின்வரும் பதவிவழி உறுப்பினர்களையும் பிற உறுப்பினர்களையும் கொண்டிருக்கும் அதாவது:– கல்வி மன்றம்,

**வகை –I– பதவிவழி உறுப்பினர்கள்.**

(a) துணைவேந்தர்;

(b) புலங்களின் முதன்மையர்கள்;

(c) பள்ளியின் அனைத்துத் துறைகளின் தலைவர்கள்;

(d) பள்ளியின் அனைத்துப் பேராசிரியர்கள்;

(e) பள்ளி நூலகத்தின் நூலகர்;

**வகை–II– பிற உறுப்பினர்கள்**

(a) வேந்தரால் பெயர் குறித்து நியமிக்கப்படும், இந்திய வழக்குரைஞர் மன்றத்தின் உறுப்பினர் ஒருவர்;

(b) வேந்தரால் பெயர் குறித்து நியமிக்கப்படும், தமிழ்நாடு வழக்குரைஞர் மன்றத்தின் உறுப்பினர் ஒருவர்;

(c) துணைவேந்தரால் பெயர் குறித்து நியமிக்கப்படும், இப்பள்ளியின் இணைப் பேராசிரியரையும் உதவிப் பேராசிரியரையும் சார்பாற்றம் செய்யும் இரண்டு உறுப்பினர்கள்;

(d) துணைவேந்தரால் பெயர் குறித்து நியமிக்கப்படும், தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழகத்தின் பேராசிரியர் ஒருவர்;

(e) துணைவேந்தரால் பெயர் குறித்து நியமிக்கப்படும், இந்தியாவிலுள்ள தேசிய சட்டப் பல்கலைக் கழகங்களில் ஏதாவதொன்றிலிருந்து முதுநிலை சட்டப் பேராசிரியர் ஒருவர்;

(f) துணை வேந்தரால் நியமிக்கப்படும், பள்ளியால் வகுத்துரைக்கப்பட்ட திட்டம் மற்றும் பாடத்திட்டத்தின்படி வழங்கப்படும் சட்டமல்லாத பிற படிப்புகள் ஒவ்வொன்றுக்கும் ஆசிரியர் ஒருவர்;

(g) வேந்தரால் பெயர் குறித்து நியமிக்கப்படும், நீதித்துறையில் புகழ் வாய்ந்த நபர் ஒருவர்;

(h) துணைவேந்தரால் பெயர் குறித்து நியமிக்கப்படும், தென்னிந்திய வணிக மற்றும் தொழில் கழகத்தின் உறுப்பினர் ஒருவர்; மற்றும்

(i) துணை வேந்தரால் பெயர் குறித்து நியமிக்கப்படும் சமூகப் பணி என்பதான புலத்தில் புகழ் வாய்ந்த நபர் ஒருவர்.

**29.** இந்தச் சட்டத்தின் மற்றும் ஒழுங்குமுறை விதிகளின் வகைமுறைகளுக்குட்பட்டு கல்வி மன்றமானது, அதனிடம் உற்றமைந்துள்ள பிற அனைத்து அதிகாரங்களுக்கும் கூடுதலாகப் பின்வரும் அதிகாரங்களையும் கொண்டிருக்கும், அவையாவன:– கல்வி மன்றத்தின் அதிகாரங்கள் மற்றும் அலுவல்கள்.

(a) பொது மன்றத்தால் அல்லது செயலாட்சி மன்றத்தால் சுட்டியனுப்பப்பட்டுள்ள அல்லது அதற்கு ஒப்படைவு செய்யப்பட்டுள்ள பிற பொருட்பாடு எதன் மீதும் அறிக்கை செய்தல்;

(b) பள்ளியில் ஆசிரியர் பதவிகளை உருவாக்குதல், நீக்குதல் செய்தல் அல்லது வகைப்படுத்துதல் குறித்தும், அதனோடு இணைந்த ஊதியங்கள் மற்றும் கடமைகள் குறித்தும் செயலாட்சி மன்றத்திற்குப் பரிந்துரைகள் செய்தல்;

(c) படிப்புப் புலங்களின் அமைப்பிற்காகத் திட்டங்களை உருவாக்குவதற்கு, மாற்றியமைப்பதற்கு அல்லது திருத்தியமைப்பதற்கு மற்றும் அத்தகைய படிப்புப் புலங்களுக்கு முறையே அவற்றின் பாடங்களை ஒதுக்கியளிப்பதற்கு மற்றும் படிப்புப் புலம் எதனையும் நீக்குவது அல்லது உட்பிரிவுசெய்வது அல்லது ஒரு படிப்புப் புலத்தை மற்றொன்றுடன் சேர்ப்பதானது உகந்தது என்பது குறித்து மேலும் செயலாட்சி மன்றத்திற்கு அறிக்கை செய்தல்;

(d) பள்ளியில் பதிவு செய்த நபர்கள் அல்லாத பிற நபர்களுக்கான அறிவுறுத்தல் மற்றும் தேர்வுக்காக ஒழுங்கு முறை விதிகள் மூலமாக ஏற்பாடுகள் செய்தல்;

(e) பள்ளியில் ஆராய்ச்சியை மேம்படுத்துதல் மற்றும் அத்தகைய ஆராய்ச்சிகளின் அடிப்படையில் அவ்வப்போது அறிக்கைகளைக் கோருதல்;

(f) படிப்புப் புலங்களினால் பணிந்தனுப்பப்பட்ட கருத்துருக்களைப் பரிசீலனை செய்தல்;

(g) பள்ளிக்கு அனுமதி பெறுவதற்காகக் குழுக்களை நியமனம் செய்தல்;

(h) பிற பல்கலைக் கழகங்கள் மற்றும் நிறுவனங்களின் பட்டயங்களை மற்றும் பட்டங்களை ஏற்பளிப்பதற்கு மற்றும் இப்பள்ளியின் பட்டங்கள் தொடர்பாக அவற்றின் சம மதிப்பைத் தீர்மானித்தல்;

(i) பொது மன்றத்தினால் ஏற்கப்பட்ட நிபந்தனை எதற்கும் உட்பட்டு, பட்டதாரி உதவித் தொகைகள், படிப்புதவித் தொகைகள் மற்றும் பிற பரிசுகளுக்கான போட்டியின் காலம், முறை மற்றும் நிபந்தனைகளை நிர்ணயிக்கலாம்; மற்றும் அவற்றை வழங்கலாம்.

(j) தேர்வாளர்களை நியமனம் செய்வதற்கு மற்றும் தேவைப்படுமாயின் அவர்களை நீக்குதல் மற்றும் அவர்களின் கட்டணங்களை, ஊதியங்களை மற்றும் பயண மற்றும் பிற செலவினங்களை நிர்ணயிப்பதற்குச் செயலாட்சி மன்றத்திற்கு பரிந்துரைகளைச் செய்தல்;

(k) தேர்வுகளை நடத்துவதற்கு மற்றும் அவ்வாறு அவற்றை நடத்துவதற்கு தேதிகளை நிர்ணயிப்பதற்கு ஏற்பாடு செய்தல்;

(l) பல்வேறு தேர்வுகளுக்கான முடிவுகளை வெளியிடுதல் அல்லது அவ்வாறு செய்வதற்கு குழுக்கள் அல்லது அலுவலர்களை நியமித்தல் மற்றும் பட்டங்கள், மதிப்புறு பட்டங்கள், உரிமங்கள், விருதுப்பட்டங்கள் மற்றும் மதிப்புறு சின்னங்கள் ஆகியவற்றை அளித்தல் அல்லது வழங்குதல் குறித்து பரிந்துரைகளைச் செய்தல்;

(m) ஒழுங்குமுறை விதிகளுக்கிணங்கவும், விருதுகள் வழங்குதலுடன் இணைக்கப்படக்கூடிய அத்தகைய நிபந்தனைகளுக்கிணங்கவும், உதவித் தொகைகள், படிப்புதவித் தொகைகள், பதக்கங்கள், பரிசுகள் ஆகியவற்றை வழங்குதல் மற்றும் பிற விருதுகளை வழங்குதல்;

(n) வகுத்துரைக்கப்பட்ட அல்லது பரிந்துரை செய்யப்பட்ட பாடப் புத்தகங்களின் பட்டியல்களை வெளியிடுதல்; மற்றும் வகுத்துரைக்கப்பட்ட குறித்தகாலப் படிப்புப் பிரிவுகளுக்கான பாடத் திட்டங்களை வெளியிடுதல்;

(o) ஒழுங்குமுறை விதிகளால் அவ்வப்போது வகுத்துரைக்கப்பட்ட படிவங்களை மற்றும் பதிவேடுகளை, தயாரித்தல்; மற்றும்

(p) கல்விசார் பொருட்பாடுகள் தொடர்பாக, இந்தச் சட்டத்தின் மற்றும் ஒழுங்குமுறை விதிகளின் வகைமுறைகளை உரியவாறு நிறைவேற்றுவதற்குத் தேவையாக இருக்கக்கூடிய அத்தகைய அனைத்து கடமைகளையும் ஆற்றுதல் மற்றும் அத்தகைய அனைத்துச் செயற்பாடுகளையும் செய்தல்;

**30. (1)** கல்வி மன்றமானது, துணைவேந்தரால் நிருணயிக்கப்படும் தேதிகளில், ஆண்டு ஒவ்வொன்றிலும் இருமுறையேனும் கூடுதல் வேண்டும். அத்தகைய கூட்டங்களில் ஒன்று ஆண்டுக்கூட்டம் என்று வழங்கப்படுதல் வேண்டும். கல்வி மன்றம் அவ்வப்போது அது தீர்மானிக்கக்கூடிய பிற நேரங்களிலும் கூடலாம். கல்வி மன்றக் கூட்டங்கள்.

**(2)** கல்வி மன்றத்தின் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பகுதி எண்ணிக்கையானது, கல்வி மன்றத்தின் கூட்டமொன்றுக்குக் கோரப்படும் குறைவெண் வரம்பாக இருக்கும்:

**வரம்புரை:** ஆனால், பட்டங்கள், விருதுப்பட்டங்கள் அல்லது பிற கல்விச் சிறப்புகள் ஆகியவற்றை வழங்கும் நோக்கத்திற்காக நடத்தப்படும் இப்பள்ளியின் பட்டமளிப்பு விழா ஒன்றுக்கு அல்லது கல்வி மன்றத்தின் கூட்டம் ஒன்றுக்கு அத்தகைய குறைவெண்ணானது கோரப்படுதல் ஆகாது.

**(3)** துணைவேந்தர், தாம் பொருத்தமெனக் கருதும் போது அல்லது கல்வி மன்றத்தின் மொத்த உறுப்பினர்களில் நூற்றுக்கு ஐம்பது விழுக்காட்டிற்குக் குறையாத உறுப்பினர்களால் கையொப்பமிடப்பட்டுச் செய்யப்படும் எழுத்துருவிலான வேண்டுகோள் ஒன்றின்பேரில், கல்விமன்றத்தின் சிறப்புக் கூட்டமொன்றைக் கூட்டலாம்.

**31. (1)** நிதிக்குழு பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டதாயிருக்கும், அதாவது:— நிதிக்குழு.

(a) துணைவேந்தர்;

(b) நிதித்துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசுச் செயலாளர்;

(c) சட்டத்துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசுச் செயலாளர்; மற்றும்

(d) செயலாட்சி மன்றத்தால் நியமனஞ் செய்யப்படும் இந்திய பட்டயக் கணக்கர்கள் நிறுவனத்தின் தென்னிந்திய மண்டல மன்றத்தின் உறுப்பினர் ஒருவர்;

**(2). (1)** ஆம் உட்பிரிவின் (b) அல்லது (c) எனும் கூறுகளில் குறிப்பிடப்பட்ட அலுவலர் எவரும் எக்காரணத்தினாலேனும் நிதிக்குழுக் கூட்டத்திற்கு வருவதற்கு இயலாதிருப்பாராயின், அவர் அரசுத் துணைச் செயலாளரின் படிநிலைக்குக் குறையாத தம் துறையின் அலுவலரொருவரை அத்தகைய கூட்டத்திற்கு வருகை தருவதற்கு அனுப்பிவைக்கலாம்; அவ்வாறு அனுப்பி வைக்கப்படும் அலுவலர், நிதிக்குழுவின் விவாதங்களில் பங்கேற்க உரிமை பெற்றிருப்பார், மற்றும் வாக்களிப்பதற்கும் உரிமை பெற்றிருப்பார்.

**(3)** துணை வேந்தர், நிதிக்குழுவின் <u>*பதவிவழித்*</u> தலைமையாளராக இருந்து வருவார்; மற்றும் நிதி அலுவலர், நிதிக்குழுவின் <u>*பதவிவழிச்*</u> செயலாளராக இருந்து வருவார்.

**(4). (1)**—ஆம் உட்பிரிவின், **(d)** எனும் கூறின்படி, செயலாட்சி மன்றத்தால் நிதிக் குழுவிற்குப் பெயர் குறித்து நியமனம் செய்யப்படும் உறுப்பினர், மூன்றாண்டுக் காலஅளவிற்குப் பதவி வகிப்பார்.

**(5)** நிதி அலுவலரால் தயாரிக்கப்பட்ட பள்ளியின் ஆண்டுக் கணக்குகள் பரிசீலனைக்காகவும், கருத்துரைகளுக்காகவுமென நிதிக்குழுவின் முன் வைக்கப்படுதல் வேண்டும்; மற்றும் அதன் பின்பு ஒப்புதலளிக்கப்படுதற்காக செயலாட்சி மன்றத்திற்குப் பணிந்தனுப்பப்படுதல் வேண்டும்.

**(6)** நிதி அலுவலரால் தயாரிக்கப்பட்ட பள்ளியின் நிதி மதிப்பீடுகள், பரிசீலனைக்காகவும் கருத்துரைகளுக்காகவுமென நிதிக் குழுவின் முன்பு வைக்கப்படுதல் வேண்டும். நிதிக்குழுவினால் மாற்றியமைக்கப்பட்டவாறான மேற்சொன்ன மதிப்பீடுகள், அதன் பின்பு பரிசீலனைக்காக செயலாட்சி மன்றத்தின் முன்பு வைக்கப்படுதல் வேண்டும். செயலாட்சி மன்றமானது நிதி மதிப்பீடுகளுக்குத் தாம் பொருத்தமெனக் கருதுகிற அத்தகைய மாற்றங்களுடன் ஒப்புதலளிக்கலாம்.

(7) நிதிக்குழுவானது, பள்ளியின் வருமானம் மற்றும் வள ஆதாரங்கள் ஆகியவற்றின் அடிப்படையில், ஆண்டிற்கான மொத்த தொடர் செலவினம் மற்றும் மொத்த தொடராச் செலவினம் ஆகியவற்றின் வரம்புகளைப் பரிந்துரைத்தல் வேண்டும். அத்தகைய வரம்புகள், ஆக்கப்பூர்வமான பணிகளைப் பொறுத்த நேர்வில், கடன்களிலிருந்து பெறும் தொகையை உள்ளடக்கியனவாக இருக்கலாம்.

(8) நிதிக் குழு,–

(a) கணக்குகளைப் பரிசீலனை செய்வதற்கும் மற்றும் செலவினத்திற்கான கருத்துக்களைக் கூர்ந்தாய்வு செய்வதற்கும் குறைந்தது மூன்று திங்களுக்கு ஒரு முறையாவது கூடுதல் வேண்டும்;

(b) அவ்வப்போது பள்ளியின் நிதி நிலையை ஆய்வு செய்தல் வேண்டும்;

(c) ஆண்டு நிதி மதிப்பீடுகளில் வகைமுறை எதுவும் செய்யப்பட்டிராத முதலீடு அல்லது செலவினத்தை உள்ளடக்குகிற அல்லது ஆண்டு நிதி மதிப்பீடுகளில் வகை செய்யப்பட்டுள்ள தொகைக்கு மேற்பட்ட செலவை உள்ளடக்கியுள்ள கருத்துரு ஒவ்வொன்றின்பேரிலும், செயலாட்சி மன்றத்திற்குப் பரிந்துரை செய்தல் வேண்டும்;

(d) பள்ளியின் கணக்குகளை வைத்துப் பேணி வருவதற்கான முறையையும் நடைமுறையையும் படிவங்களையும் வகுத்துரைத்தல் வேண்டும்;

(e) பள்ளியின் நிதிகள் தொடர்பான அனைத்துப் பொருட்பாடுகளின் பேரிலும் செயலாட்சி மன்றத்திற்குப் பரிந்துரை செய்தல் வேண்டும்; மற்றும்

(f) ஒழுங்குமுறை விதிகளால் வகுத்துரைக்கப்படக்கூடிய அத்தகைய பிற அலுவல்களைப் புரிந்துவருதல் வேண்டும்.

பாடக்குழு.

**32.** (1) கற்பிக்கின்ற அல்லது ஆய்வு செய்கின்ற துறை ஒவ்வொன்றுடனும் இணைக்கப்பட்ட பாடக் குழுவொன்று இருந்துவரும்.

(2) அப்பாடக்குழுவை அமைத்துருவாக்குதலும், அதன் அதிகாரங்களும் வகுத்துரைக்கப்படக் கூடியவாறு இருக்கும்.

பிற அதிகார அமைப்புகளை அமைத்துரு வாக்குதல்.

**33.** செயலாட்சி மன்றமானது ஒழுங்குமுறை விதிகளால் வகுத்துரைக்கப்பட்ட முறையில் தேவைப்படக்கூடியவாறு, இப்பள்ளியின் அத்தகைய பிற அதிகார அமைப்புகளை அமைத்துருவாக்கலாம்.

குழுக்களை அமைத்துரு வாக்குதலும் அதிகாரங்களை ஒப்படைவு செய்தலும்.

**34.** இப்பள்ளியின் அதிகார அமைப்புகள் அனைத்தும், குழுக்களை அமைத்துருவாக்குவதற்கும் அல்லது மாற்றி அமைத்துருவாக்குவதற்கும் மற்றும் அவை தக்கதெனக் கருதும் அத்தகைய அதிகாரங்களை அவற்றுக்கு ஒப்படைவு செய்வதற்கும் அதிகாரம் உடையது ஆகும்; அத்தகைய குழுக்கள் வேறுவிதமாக வகை செய்யப்பட்டவாறல்லாமல், தொடர்புடைய அதிகார அமைப்பின் உறுப்பினர்களையும், ஒவ்வொரு நேர்விலும் அதிகார அமைப்பு தக்கதெனக் கருதும் பிற நபர்கள் எவரேனுமிருப்பின், அவர்களையும் கொண்டதாக இருக்கும்.

புலங்களை அமைத்துரு வாக்குதலும் அவற்றின் அலுவல்களும்.

**35.** (1) இப்பள்ளியானது அதன் நோக்கங்களையும் அலுவல்களையும் கருத்திற்கொண்டு வகுத்துரைக்கப்படக்கூடிய முறையில் அத்தகைய புலங்களை அமைத்துருவாக்கலாம்.

(2) இப் புலங்களை அமைத்துருவாக்குதலும் அவற்றின் அலுவல்களும் பிற அனைத்து வகைகளிலும் வகுத்துரைக்கப்படக்கூடியனவாக இருக்கும்.

(3) புலம் ஒவ்வொன்றும் வகுத்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய கற்பிக்கின்ற துறைகளைக் கொண்டதாயிருக்கும்.

## அத்தியாயம் V.

## ஒழுங்குமுறை விதிகள்.

**36.** இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு உட்பட்டு ஒழுங்குமுறை விதிகள், பின்வரும் பொருட்பாடுகள் அனைத்திற்கும் அல்லது அவற்றில் எதற்கும் வகை செய்யலாம், அதாவது:– ஒழுங்குமுறை விதிகள்.

(a) பட்டங்களையும் பிற கல்விச் சிறப்புகளையும் வழங்குவதற்காகப் பட்டமளிப்பு விழாக்களை நடத்துதல்;

(b) மதிப்புறு பட்டங்களையும் பிற கல்விச் சிறப்புகளையும் வழங்குதல்;

(c) இப்பள்ளியின் அதிகார அமைப்புகளை அமைத்துருவாக்குதல் அவற்றின் அதிகாரங்கள் மற்றும் செயற்பணிகள்;

(d) இப்பள்ளியின் அதிகார அமைப்புகளின் உறுப்பினர்களுக்கிடையேயான காலியிடங்களை நிரப்புவதற்கான முறை;

(e) இப்பள்ளியின் அதிகார அமைப்புகளின் மற்றும் அவற்றின் குழுக்களின் உறுப்பினர்களுக்கு அளிக்கப்பட வேண்டிய படித் தொகைகள்;

(f) இப்பள்ளியின் அதிகார அமைப்புகளின் கூட்டங்களில் அலுவல் நடத்துவதற்கான குறைவெண் வரம்பு உள்ளடங்கலாக அத்தகைய கூட்டங்களின் நடைமுறைகள்;

(g) இப்பள்ளியின் அதிகார அமைப்புகளின் ஆணைகள் அல்லது முடிவுகளுக்கு உறுதியொப்பமிடுதல்;

(h) இப்பள்ளியில் ஆராய்ச்சிக்கான துறைகளை உருவாக்குதல்;

(i) வேந்தர் மற்றும் இணை வேந்தர் நீங்கலாக, இப்பள்ளியின் பிற அலுவலர்களின் பதவிக்கான காலஅளவு மற்றும் நியமன முறைகள் மற்றும் பணி பற்றிய நிபந்தனைகள்;

(j) இப்பள்ளியால் பணியில் நியமிக்கப்படும் ஆசிரியர்கள் மற்றும் பிற நபர்களின் தகுதிப்பாடுகள்;

(k) இப்பள்ளியால் பணியில் அமர்த்தப்படும் ஆசிரியர்கள் மற்றும் பிற நபர்களை வகைப்படுத்துதல்; அவர்களின் நியமனமுறை மற்றும் அவர்களின் பணி பற்றிய வரையறைகளையும் நிபந்தனைகளையும் தீர்மானித்தல்;

(l) இப்பள்ளியால் பணியிலமர்த்தப்படும் அலுவலர்கள், ஆசிரியர்கள் மற்றும் பிற நபர்களின் நன்மைக்காக ஓய்வூதியம், பணிக்கொடை, காப்பீடு அல்லது வருங்கால வைப்பு நிதியத்தை ஏற்படுத்துதல்;

(m) பட்டதாரி உதவி த் தொகைகள், பட்டதாரி பயண உதவித் தொகைகள், படிப்புதவித் தொகைகள், மாணவ உதவித் தொகைகள், உதவிச் சம்பளங்கள், ஆதரவுப் படித் தொகைகள், பதக்கங்கள், பரிசுகள் ஆகியவற்றை ஏற்படுத்துதலும் அவற்றை வழங்குவதற்கான நிபந்தனைகளும்;

(n) கூடங்கள், மாணவர் இல்லங்கள் ஆகியவற்றை நிறுவுதலும் பேணி வருதலும்;

(o) இப்பள்ளியினால் பேணி வரப்படுபவையல்லாத பிற மாணவர் இல்லங்களை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கான நிபந்தனைகள்;

(p) கூடங்களிலும் மாணவர் இல்லங்களிலும் இப்பள்ளி மாணவர்கள் தங்கியிருப்பதற்கான நிபந்தனைகளும் மற்றும் அவ்வாறு தங்கியிருப்பதற்கான கட்டணங்கள் மற்றும் பிற தொகைகளை விதித்தலும்;

(q) பட்டதாரிகள் பதிவு செய்து கொள்வதற்கான நிபந்தனைகள் மற்றும் அதற்கான பதிவேட்டைப் பேணி வருதல்;

(r) இப் பள்ளியின் அதிகார அமைப்புகளிடம் அல்லது அலுவலர்களிடம் உற்றமைந்துள்ள அதிகாரங்களை ஒப்படைவு செய்தல்; மற்றும்

(s) ஒழுங்முறை விதிகளால் வகுத்துரைக்கப்படத் தேவைப்படுகின்ற அல்லது வகுத்துரைக்கப்படக்கூடிய பிற பொருட்பாடு எதுவும்.

ஒழுங்குமுறை விதிகள் எவ்வாறு செய்யப்படுகின்றன எனல்.

**37.** (1) இந்தச் சட்டத்தின் வகை முறைகளுக்கு உட்பட்டு, செயலாட்சி மன்றமானது, அதனிடம் உற்றமைந்துள்ள அதிகாரங்கள் அனைத்திற்கும் கூடுதலாக, இப்பள்ளியின் செயற்பாடுகளின் நிருவாகம் மற்றும் மேலாண்மைக்கு வகை செய்வதற்காக ஒழுங்குமுறைவிதிகளை உருவாக்குவதற்கு அதிகாரம் கொண்டிருத்தல் வேண்டும்:

**முதலாம் வரம்புரை:** ஆனால், செயலாட்சி மன்றமானது, இப்பள்ளியின் அதிகார அமைப்பு எதனின் தகுதி, அதிகாரங்கள் அல்லது அமைப்பினைப் பாதிக்கின்ற ஒழுங்குமுறை விதி எதனையும், அத்தகைய அதிகார அமைப்பிற்கு, கருதப்படும் மாற்றத்தின்பேரில் எழுத்துருவிலான கருத்து ஒன்றை வெளிப்படுத்துவதற்கு வாய்ப்பு அளிக்கப்பட்டிருந்தாலன்றி, செய்தல் கூடாது; மற்றும் அவ்வாறு வெளியிடப்படுத்தப்பட்ட கருத்து எதுவும், செயலாட்சி மன்றத்தால் பரிசீலனை செய்யப்படுதல் வேண்டும்:

**இரண்டாம் வரம்புரை:** மேலும், கல்வி மன்றத்தின் முன் ஒருங்கிசைவுடன் அல்லாமல், செயலாட்சி மன்றமானது, பின்வரும் பொருட்பாடுகள் எதனையும் அல்லது அனைத்தையும் பாதிக்கிற ஒழுங்குமுறை விதி எதனையும் செய்வதோ, அதில் திருத்தம் செய்வதோ அல்லது நீக்கம் செய்வதோ கூடாது, அவையாவன:–

(a) கல்வி மன்றத்தின் அமைப்பு, அதிகாரங்கள் மற்றும் கடமைகள்;

(b) இப்பள்ளியின் குறித்தகாலப் பாடப் பிரிவுகள் மற்றும் தொடர்புள்ள கல்விசார் திட்டங்களுடன் தொடர்புடையவாறு கல்வி கற்பிக்க ஏற்பாடு செய்வதற்குப் பொறுப்புடைய அதிகார அமைப்புகள்;

(c) பட்டங்கள், சான்றிதழ்கள் அல்லது கல்விச் சிறப்புகளைத் திரும்பப் பெறுதல்;

(d) கல்விப் புலங்கள், துறைகள், கல்விக்கூடங்கள் மற்றும் நிறுவனங்களை நிறுவுதல் மற்றும் கலைத்தல்;

(e) பட்டதாரி உதவித் தொகைகள், படிப்புதவித் தொகைகள், மாணவர் உதவித் தொகைகள்,ஆதரவு படித்தொகைகள், பதக்கங்கள் மற்றும் பரிசுகளை ஏற்படுத்துதல்;

(f) தேர்வாளர்களை நியமிப்பதற்கான அல்லது தேர்வுகளை நடத்துவதற்கான அல்லது அவற்றின் தரநிலைக்கான அல்லது பிற குறித்தகால பாடப்பிரிவுகளுக்கான நிபந்தனைகளும் முறைகளும்;

(g) மாணவர்களைப் பதிவு செய்வதற்கான அல்லது சேர்த்துக் கொள்வதற்கான முறை;

(h) இப்பள்ளியின் தேர்வுகளுக்குச் சமமானவை என ஏற்பிசைவளிக்கப்பட வேண்டிய தேர்வுகள்;

(2) கல்வி மன்றமானது, (1)–ஆம் உட்பிரிவின் (a) முதல் (h) வரையிலான கூறுகளில் குறித்துரைக்கப்பட்டுள்ள பொருட்பாடுகள் அனைத்தின் மீதும் மற்றும் அவற்றுக்கு இடைவிளைவானதும் அவற்றோடு தொடர்புடையதுமான பொருட்பாடுகள் குறித்தும் ஒழுங்குமுறை விதிகளை முன்மொழிவதற்கு அதிகாரம் கொண்டிருத்தல் வேண்டும்.

(3) கல்வி மன்றத்தினால் முன்மொழியப்பட்ட ஒழுங்குமுறை விதி ஒன்றின் வரைவை, செயலாட்சி மன்றமானது ஏற்க மறுக்கிறவிடத்து, கல்வி மன்றமானது, வேந்தருக்கு மேல்முறையீடு

செய்யலாம்; மற்றும் வேந்தரானவர், ஆணையின்வாயிலாக, கருதப்பட்ட ஒழுங்குமுறை விதியானது பொதுக்குழுவின் அடுத்த கூட்டத்தில், அதனுடைய ஏற்பளிப்பிற்காக வைக்கப்படுதல் வேண்டும் என பணிக்கலாம் மற்றும் பொதுக்குழுவின் அத்தகைய ஏற்பளிப்பு நிலுவையில் இருக்கையில், அது, அந்த ஆணையில் குறித்துரைக்கக்கூடிய அத்தகைய தேதியிலிருந்து செயல் விளைவு கொள்ளுதல் வேண்டும்:

**வரம்புரை**:– ஆனால், ஒழுங்குமுறை விதியானது, பொது மன்றத்தினால் அத்தகைய கூட்டத்தில் ஏற்பளிக்கப்படவில்லையாயின், அது செயல் விளைவு கொள்வது அற்றுப்போதல் வேண்டும்.

(4) செயலாட்சி மன்றத்தினால் செய்யப்படும் ஒழுங்குமுறை விதிகள் அனைத்தும், கூடிய விரைவில் ஏற்பளிப்புக்காக வேந்தருக்கு மற்றும் பொது மன்றத்திற்கு அதன் அடுத்த கூட்டத்தில் வைத்து பணிந்தனுப்பப்படுதல் வேண்டும்; மற்றும் பொது மன்றமானது, வந்திருக்கும் உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கிற்குக் குறையாதவர்களின் பெரும்பான்மை ஒன்றினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் வாயிலாக, செயலாட்சிக் குழுவினால் செய்யப்பட்ட ஒழுங்குமுறைவிதி எதனையும் நீக்கம் செய்வதற்கு அதிகாரம் கொண்டிருக்கும், மற்றும் அத்தகைய ஒழுங்குமுறை விதியானது, அத்தகைய தீர்மானத்தின் தேதியிலிருந்து செயல்விளைவு கொள்வது அற்றுப் போதல் வேண்டும்.

**அத்தியாயம் VI.**

மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளுதலும் அவர்களின் தங்குமிடங்களும்.

பள்ளியின் குறித்தகாலப் படிப்புப் பிரிவுகளுக்கு மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளுதல்.

**38.** நபர்எவரும்,

(a) அதற்கென வகுத்துரைக்கப்பட்ட தேர்வில் தேர்ச்சி பெற்றிருக்கிறார் என்றாலன்றி; மற்றும்

(b) வகுத்துரைக்கப்படக்கூடிய பிற நிபந்தனைகளை நிறைவுசெய்கிறார் என்றாலன்றி, அவர் இப்பள்ளியின் பட்டங்கள் அல்லது பிற கல்விச்சிறப்புகளுக்கான தேர்வுகளுக்கு ஏற்றுக் கொள்ளப்படுவதற்காக, இப்பள்ளியின் குறித்த காலப் படிப்பு பிரிவு ஒன்றில் சேர்த்துக்கொள்ளப்படுதல் ஆகாது.

பள்ளிக்கு மாணவர்களைத் தெரிவு செய்தலும் சேர்த்துக் கொள்ளுதலும்.

**39.** 38–ஆம் பிரிவில் அல்லது இந்தச் சட்டத்தின் பிற வகை முறைகள் எவற்றிலும் என்ன அடங்கியிருந்தபோதிலும், அரசானது குறித்த காலப் படிப்பு பிரிவுகளுக்கு மாணவர்களைச் சேர்ப்பதற்காக அவர்களைத் தெரிவு செய்வதற்கான கொள்கை, வழிகாட்டுநெறிகள், முறை மற்றும் நடைமுறையினை பொது அல்லது சிறப்பு ஆணையின் வாயிலாகக் குறித்துரைக்கலாம்.

மாணவர்களின் தங்குமிடங்கள்.

**40.** இப்பள்ளியின் மாணவர் ஒவ்வொருவரும், இப்பள்ளியால் பேணிவரப்பட்ட அல்லது ஏற்பிசைவளிக்கப்பட்ட விடுதி ஒன்றில் அல்லது ஒழுங்குமுறை விதிகளால் வகுத்துரைக்கப்படக்கூடிய அத்தகைய நிபந்தனைகளின்படி தங்கியிருத்தல் வேண்டும்.

**அத்தியாயம் VII.**

**பள்ளியின் நிதியங்கள், ஆண்டு அறிக்கை மற்றும் கணக்குகள்.**

பொது நிதியம்

**41.** பள்ளியானது, பொது நிதியமொன்றைப் பெற்றிருக்கும்; அந்நிதியத்தில்,–

(a) கட்டணங்கள், மானியங்கள், நன்கொடைகள், கொடைகள் ஆகியவற்றிலிருந்தான வருமானம் எவையேனுமிருப்பின் அவற்றையும்;

(b) மைய அரசாலோ, மாநில அரசு எதனாலுமோ, இந்திய வழக்குரைஞர் மன்றத்தாலோ, தமிழ்நாடு வழக்குரைஞர் மன்றத்தாலோ அல்லது உள்ளாட்சி அதிகார அமைப்பு எதனாலுமோ பல்கலைக் கழக மானிய ஆணையக்குழுவாலோ, மைய அரசுக்கு அல்லது மாநில அரசு ஏதொன்றுக்கும் சொந்தமான அல்லது அதனால் கட்டுப்பாடு செய்யப்பட்டுவரும் அது போன்ற பிற அமைப்பு எதனாலுமோ அல்லது கழகம் எதனாலுமோ அளிக்கப்படும் பங்களிப்புத் தொகை அல்லது மானியம் எதனையும்;

(c) நிலைக்கொடைகளையும் பிற வரவுகளையும், மற்றும்

(d) அதனால் கடன் வாங்கப்பட்ட பணத்தையும் வரவு வைத்தல் வேண்டும்.

பிற நிதியங்கள்.

**42.** இப்பள்ளியானது, வகுத்துரைக்கப்படக் கூடிய பிற நிதியங்களைப் பெற்றிருக்கலாம்;

நிதியங்களை மேலாண்மை செய்தல்.

**43.** இப்பள்ளியின் நிதியங்களையும் அனைத்துப் பணங்களையும் வகுத்துரைக்கப்படக்கூடிய அத்தகைய முறையில் மேலாண்மை செய்தல் வேண்டும்.

ஆண்டறிக்கை.

**44.** இப்பள்ளியின் ஆண்டறிக்கையானது, செயலாட்சி மன்றத்தால் தயாரிக்கப்படுதலும், பொதுக்குழுவிற்கு வகுத்துரைக்கப் படக்கூடிய அத்தகைய தேதியன்று அல்லது அதற்கு முன்பு பணிந்தனுப்பப்படுதலும் வேண்டும்; மற்றும் பொதுக்குழுவினால் அதனுடைய அடுத்த ஆண்டுக் கூட்டத்தில் பரிசீலனை செய்யப்படுதல் வேண்டும். பொதுக்குழு, அதன்பேரில் தீர்மானங்களை நிறைவேற்றி செயலாட்சி மன்றத்திற்குத் தெரிவிக்கலாம்; அது அதற்கிணங்க அது நடவடிக்கை எடுத்தல் வேண்டும். செயலாட்சி மன்றமானது, அதனால் எடுக்கப்பட்ட நடவடிக்கையினைப் பொது மன்றத்திற்குத் தெரிவித்தல் வேண்டும். அதன்பேரிலான அறிக்கையின் படியொன்று, பொது மன்றத்தின் தீர்மானம் எதுவும் இருப்பின் அதன் படியொன்றுடன் சேர்த்து அரசுக்கு பணிந்தனுப்பப்படுதல் வேண்டும்.

ஆண்டுக் கணக்குகள்.

**45.** (1) பள்ளியின் ஆண்டுக்கணக்குகள், அரசு பணிக்கக்கூடிய அத்தகைய ஆய்வுக்காகவும், தணிக்கைக்காகவும் பணிந்தனுப்பப்படுதல் வேண்டும், மற்றும் ஆண்டுக் கணக்குகள் மற்றும் தணிக்கை அறிக்கையின் படியொன்று அரசுக்குப் பணிந்தனுப்பப்படுதல் வேண்டும்.

(2) பள்ளியானது, அத்தகைய தணிக்கையில் எழுப்பப்பட்டுள்ள மறுப்புரைகளை தீர்த்துவைத்தல் வேண்டும் மற்றும் அத்தகைய தணிக்கை அறிக்கையின் மீது அரசால் வழங்கப்படக்கூடிய அத்தகைய அறிவுரைகளை நிறைவேற்றுதல் வேண்டும்.

(3) கணக்குகள், தணிக்கை செய்யப்பட்டபோது, வகுத்துரைக்கப்படக்கூடிய அத்தகைய முறையில் செயலாட்சி மன்றத்தால் வெளியிடப்படுதல் வேண்டும்; மற்றும் அதனின் படிகள் பொது மன்றத்திற்கு அதனுடைய அடுத்த கூட்டத்தில் வைப்பதற்குப் பணிந்தனுப்பப்படுதல் வேண்டும்; மற்றும் அத்தகைய வெளியீட்டின் தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள் அரசுக்கும் பணிந்தனுப்பப்படுதல் வேண்டும்.

(4) அரசானது, தணிக்கை செய்யப்பட்ட ஆண்டு கணக்குகள் மற்றும் ஆண்டறிக்கையினை அதனுடைய கருத்துரைகளுடன் சேர்த்து சட்டமன்றப் பேரவையின் முன்பு வைப்பதற்கு ஆவன செய்தல் வேண்டும்.

## அத்தியாயம் VIII.

## பணி பற்றிய நிபந்தனைகள்.

ஓய்வூதியம், பணிக்கொடை முதலியன.

**46.** பள்ளியானது, தன் அலுவலர்கள், ஆசிரியர்கள், பள்ளியால் பணியிலமர்த்தப்பட்டுள்ள பிற நபர்கள் ஆகியோரின் நன்மைக்காக, வகுத்துரைக்கப்படக்கூடிய முறையிலும் நிபந்தனைகளுக்குட்பட்டும், தான் பொருத்தமெனக் கருதக்கூடிய ஓய்வூதியம், பணிக்கொடை, காப்பீடு, வருங்கால வைப்பு நிதியம் ஆகியவற்றை ஏற்படுத்துதல் வேண்டும்.

பணி நிபந்தனைகள்.

**47.** இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்குட்பட்டு, இப்பள்ளியில் பணியிலமர்த்தப்பட்டுள்ள அலுவலர்கள், ஆசிரியர்கள், பிறநபர்கள் ஆகியோரின் நியமனம், அவர்களைத் தெரிவு செய்வதற்கான நடைமுறை, அவர்களின் சம்பளம் மற்றும் படித்தொகைகள் மற்றும் பிற பணி நிபந்தனைகள் ஆகியவை வகுத்துரைக்கப்படக்கூடியவாறு இருத்தல் வேண்டும்:

**வரம்புரை**: ஆனால், இப்பள்ளியில் செய்யப்படும் நியமனங்களைப் பொறுத்தவரையில், அரசின் கீழ்வருகின்ற பணிகளில் செய்யப்படும் நியமனங்களுக்குப் பொருந்துவன போன்ற இட ஒதுக்கீடு விதி முறையானது பின்பற்றப்படுதல் வேண்டும்.

**விளக்கம்:** இந்தப் பிரிவின் நோக்கத்திற்காக, ‘‘அலுவலர்கள்’’ என்னும் சொல், வேந்தரையும் இணை வேந்தரையும் உள்ளடக்காது.

**48. (1)** இப்பள்ளியின் பேராசிரியர், இணைப் பேராசிரியர், உதவிப் பேராசிரியர், நூலகர் ஆகிய பதவிகளுக்கு நியமனஞ் செய்ய, பொது மன்றத்திற்குப் பரிந்துரைகளைச் செய்வதற்காகத் தெரிவுக் குழு ஒன்று இருத்தல் வேண்டும். தெரிவுக் குழு.

(2). (1)–ஆம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள பதவிகளுக்கு நியமனம் செய்வதற்கான தெரிவுக் குழுவானது, துணை வேந்தரையும், வேந்தரின் நியமனதாரர் ஒருவரையும், அரசின் நியமனதாரர் ஒருவரையும், ஒழுங்குமுறை விதிகளால் வகுத்துரைக்கப்படக்கூடிய பிற நபர்களையும் கொண்டிருக்கும்:

**வரம்புரை:** ஆனால், அத்தகைய நியமனத்திற்காக தெரிவுக் குழுவினால் செய்யப்படும் தெரிவானது, பல்கலைக்கழக மானிய ஆணையக் குழுவாலோ, அத்தகைய நியமனம் தொடர்பான பிற முகவாண்மை அமைப்புகளினாலோ வழங்கப்படக்கூடிய வழிகாட்டு நெறிமுறைகளுக்கு இணங்கிய வகையில் செய்யப்படுதல் வேண்டும்.

(3) தெரிவுக்குழு ஒன்றின் கூட்டங்கள், துணைவேந்தரால் கூட்டப்படுதல் வேண்டும்.

(4) பரிந்துரை செய்கையில் தெரிவுக்குழு ஒன்றினால் பின்பற்றப்படவேண்டிய நெறிமுறையானது, ஒழுங்குமுறை விதிகளில் விதிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(5) செயலாட்சி மன்றமானது, தெரிவுக்குழு ஒன்றினால் செய்யப்பட்ட பரிந்துரைகளை ஏற்றுக்கொள்வதற்கு இயலாதிருக்குமாயின், அது, அதனுடைய காரணங்களைப் பதிவு செய்து, அந்தப் பொருட்பாட்டினை, இறுதி ஆணைகளுக்காக வேந்தருக்குப் பணிந்தனுப்புதல் வேண்டும்.

(6) தற்காலிகப் பதவிகளுக்கான அல்லது காலியிடங்களுக்கான நியமனங்கள் கீழே சுட்டிக்காட்டப்பட்டுள்ள முறையில் செய்யப்படுதல் வேண்டும்;

(a) தற்காலிகக் காலியிடமானது கல்விசார் பருவம் குறித்த கால அளவைவிட அதிகமான கால அளவுக்கானதாக இருப்பின் முன் சொன்ன வகை முறைகளில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள நடைமுறைகளுக்கிணங்கிய வகையில், தெரிவுக்குழுவின் ஆலோசனையின் பேரில் நிரப்பப்படுதல் வேண்டும்:

**வரம்புரை:** ஆனால், துணைவேந்தர், பணியின் நலனில், காலியிடத்தினை நிரப்புவது தேவையானதாக இருக்கிறது எனத் தெளிவுறக் காண்பாராயின், ஆறு மாதங்களுக்கு மேற்படாததொரு கால அளவிற்கு, (b)–எனும் உட்கூறில் சுட்டப்பட்டுள்ள உள்ளமைத் தேர்வுக்குழு ஒன்றினால் தற்காலிக அடிப்படை ஒன்றின் பேரில் நியமனம் செய்யப்படலாம்;

(b) தற்காலிகக் காலியிடம் ஓர் ஆண்டிற்கும் குறைவானதொரு கால அளவுக்கானதாக இருக்குமாயின், அத்தகைய காலியிடத்திற்கான நியமனமானது, தொடர்புடைய கல்விப் புலத்தின் முதன்மையரையும், துறையின் தலைவரையும், துணை வேந்தரின் நியமனதாரர் ஒருவரையும் கொண்டுள்ள உள்ளமை தெரிவுக்குழு ஒன்றின் பரிந்துரையின் பேரில் செய்யப்படுதல் வேண்டும்:

**முதலாம் வரம்புரை:** ஆனால், அதே நபர், கல்விப்புலத்தின் முதன்மையர் பதவியையும், துறைத் தலைவர் பதவியையும் வகித்து வருவாராயின், தெரிவுக்குழுவானது, துணை வேந்தரின் நியமனதாரர்கள் இருவரைக் கொண்டிருக்கலாம்:

**இரண்டாம் வரம்புரை:** மேலும், இறப்பு அல்லது பிற காரணம் எதனாலும் ஆசிரியர் பதவிகளில் திடீர் தற்காலிகக் காலியிடங்கள் ஏற்படுகிற நேர்வில், கல்விப் புலத்தின் முதன்மையர், தொடர்புடைய துறையின் தலைவருடன் கலந்தாய்வு செய்து ஒரு மாதத்திற்கான தற்காலிக நியமனம் ஒன்றைச் செய்தலும், அத்தகைய நியமனம் குறித்து துணைவேந்தர் மற்றும் பதிவாளருக்கு அறிவிப்பு செய்தலும் வேண்டும்.

(c) தற்காலிகமாக நியமனம் செய்யப்பட்ட ஆசிரியர் எவரும், அவர் இந்தச் சட்டத்தின்படி நியமனம் செய்வதற்கான முறையான தெரிவுக்குழு ஒன்றினால் பரிந்துரை செய்யப்படாதிருப்பாராயின், தற்காலிக அல்லது நேர்விற்கேற்ப நிரந்தர நியமனம் ஒன்றுக்காக, உள்ளமை தெரிவுக்குழு அல்லது முறையான தெரிவுக்குழு ஒன்றினால் அதன்பின்பு தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தாலன்றி, அத்தகைய தற்காலிக நியமனத்தின் பேரில் பணியில் தொடர்ந்து இருத்தல் கூடாது.

துறைத் தலைவர்களின் நியமனம் பற்றிய வரையறைகளும் நிபந்தனைகளும்.

**49.** (1) பள்ளியின் துறை ஒவ்வொன்றும் தலைவர் ஒருவரைக் கொண்டிருக்கும்; அவர் பேராசிரியராக இருக்கவேண்டும்; அவரது கடமைகளும் அலுவல்களும் மற்றும் நியமனத்திற்கான வரையறைகளும் நிபந்தனைகளும் வகுத்துரைக்கப்படக்கூடியவாறு இருத்தல் வேண்டும்:

**முதலாம் வரம்புரை:–** ஆனால், துறை எதிலேனும் ஒன்றிற்கு மேற்பட்ட பேராசிரியர்கள் இருப்பார்களாயின், வகுத்துரைக்கப்பட்ட முறையில் அத்துறையின் தலைவர் நியமனம் செய்யப்படுதல் வேண்டும்:

**இரண்டாம் வரம்புரை:–** மேலும், துறை ஒன்றில் பேராசிரியர் எவரும் இல்லாதிருக்குமிடத்து, இணைப் பேராசிரியர் ஒருவர் அல்லது உதவிப் பேராசிரியர் ஒருவர், வகுத்துரைக்கப்பட்டுள்ள முறையில் துறைத் தலைவராக நியமனம் செய்யப்படலாம்.

(2) துறைத் தலைவராக நியமனம் செய்யப்படுவதற்கு வழங்கப்படும் உரிமையளிப்பினை ஏற்கவியலாதென மறுப்பதற்குப் பேராசிரியர் அல்லது இணைப்பேராசிரியர் அல்லது உதவிப் பேராசிரியருக்கு உரிமையுண்டு.

(3) துறைத் தலைவராக நியமனம் செய்யப்பட்ட நபர் ஒருவர், அத்தகையவராக மூன்றாண்டுக் காலஅளவிற்குப் பதவி வகிப்பார், மற்றும் மறுநியமனத்திற்கு அவர் தகுதியுடையவர் ஆவார்.

(4) துறைத் தலைவர் ஒருவர் தம் பதவிக் காலத்தின்போது எந்த நேரத்திலும் தமது பதவியைவிட்டு விலகிக் கொள்ளலாம்.

(5) துறைத் தலைவர் ஒருவர், வகுத்துரைக்கப்படக்கூடிய அலுவல்களைப் புரிந்துவருதல் வேண்டும்.

புலங்களின் முதன்மையர்கள்

**50.** (1) புலத்தின் முதன்மையர் ஒவ்வொருவரும், அந்தப் புலத்தின் பேராசிரியர்களிடையேயிருந்து துணைவேந்தரால் மூன்றாண்டுக் கால அளவிற்கு நியமனம் செய்யப்படுதல் வேண்டும்; மற்றும் அவர் மறு நியமனத்திற்கும் தகுதியுடையவர் ஆவார்:

**முதலாம் வரம்புரை**: ஆனால், முதன்மையர் ஒருவர் அறுபது வயதை எய்தியதன்பேரில் அவர் அவ்வாறு பதவி வகிப்பது அற்றுப்போதல் வேண்டும்:

**இரண்டாம் வரம்புரை**: மேலும், புலம் ஒன்றில் பேராசிரியர் எவரும் இல்லாதிருக்கிற எந்த நேரத்திலும், துணைவேந்தர், அப்புலத்தில் முதன்மையருக்கான அதிகாரங்களைச் செலுத்தி வருதல் வேண்டும்.

(2) முதன்மையரின் பதவி காலியாக இருக்கிறபோது, அல்லது முதன்மையரானவர் நோய், வாராமை அல்லது பிற காரணம் எதன் காரணமாகவும் அவரது பதவிக்கான கடமைகளை ஆற்றுவதற்கு இயலாதிருக்கும்போது, அவரது பதவிக்கான கடமைகள் துணைவேந்தரால் அந்நோக்கத்திற்காக நியமனம் செய்யப்படக்கூடிய நபரால் ஆற்றிவரப்படுதல் வேண்டும்.

(3) முதன்மையர், புலத்தின் தலைவராக இருந்து வருவார், மற்றும் அப்புலத்தில் கற்பித்தல் மற்றும் ஆய்வினை நடத்துவதற்கும் அதன் தரநிலைகளைப் பேணி வருவதற்கும் அவர் பொறுப்புடையவராக இருந்து வருவார். முதன்மையர், வகுத்துரைக்கப்படக்கூடிய பிற அலுவல்களையும் ஆற்றி வருதல் வேண்டும்.

(4) பாடக்குழுக்கள் அல்லது நேர்விற்கேற்ப புலம் குறித்த குழுக்களின் கூட்டம் எதற்கும் முதன்மையரானவர் கூட்டத்திற்கு வந்திருக்கவும், அதில் பேசுவதற்கும் உரிமை கொண்டவராக இருப்பார்; ஆனால், அதன் உறுப்பினராக அவர் இருந்தாலன்றி, அதில் வாக்களிப்பதற்கு உரிமையுடையவராகமாட்டார்.

## அத்தியாயம் IX.

### இடைப்படுகால வகைமுறைகள்.

**51.** 11–ஆம் பிரிவின் (1)–ஆம் உட்பிரிவில் என்ன அடங்கியிருந்தபோதிலும், குறிக்கப்பட்ட தேதியிலிருந்து மூன்று திங்களுக்குள்ளாக, முதல் துணைவேந்தரானவர், அரசினால், மூன்றாண்டுகளுக்கு மேற்படாததொரு கால அளவிற்கு அது பொருத்தமெனக்கருதக்கூடிய அத்தகைய பிற நிபந்தனைகளின் பேரில் நியமிக்கப்படுதல் வேண்டும்: முதல் துணை வேந்தரின் நியமனம்.

**வரம்புரை.–** ஆனால், முதல் துணைவேந்தராக நியமிக்கப்பட்டவர், அவருடைய பதவிக்காலத்தின்போது அறுபத்தைந்து வயதை எய்துவாரானால் பதவியிலிருந்து ஓய்வு பெறுதல் வேண்டும்.

**52.** 14–ஆம் பிரிவின் (1)–ஆம் உட்பிரிவில் என்ன அடங்கியிருந்தபோதிலும், குறிக்கப்பட்ட தேதியிலிருந்து மூன்று திங்களுக்குள்ளாக, முதல் பதிவாளரானவர், அரசினால் மூன்றாண்டுகளுக்கு மேற்படாததொரு கால அளவிற்கும் அதனால் நிர்ணயிக்கப்படும் சம்பளத்தின் பேரிலும் மற்றும் அது பொருத்தமெனக் கருதக்கூடிய பிற நிபந்தனைகளின் பேரிலும் நியமிக்கப்படுதல் வேண்டும்: முதல் பதிவாளரின் நியமனம்.

**53.** (1) முதல் துணைவேந்தரானவர் நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து ஆறு திங்களுக்குள் அல்லது அறிவிக்கையின் மூலம் அரசு குறிக்கக்கூடிய ஓராண்டுக்கு மேற்படாத அத்தகைய நீண்ட கால அளவிற்குள், பொது மன்றம், செயலாட்சி மன்றம், கல்வி மன்றம், நிதிக்குழு மற்றும் பள்ளியின் அத்தகைய பிற அதிகார அமைப்புகளை அமைத்துருவாக்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டியது அவர்தம் கடமையாக இருத்தல் வேண்டும். முதல் துணைவேந்தரின் இடைப்படு கால அதிகாரங்கள்.

(2) முதல் துணைவேந்தர் அரசைக் கலந்தறிந்து, இப்பள்ளி செயற்படுவதற்குத் தேவையாயிருக்கக்கூடிய அத்தகைய விதிகளைச் செய்தல் வேண்டும்.

(3) (1)–ஆம் உட்பிரிவின்படி அமைத்துருவாக்கப்பட்ட அதிகார அமைப்புகள், அரசு இதன்பொருட்டு அறிவிக்கையின் வாயிலாக குறித்துரைக்கக்கூடிய அத்தகைய தேதியில் அவற்றின் அலுவல்களை ஆற்றத்தொடங்குதல் வேண்டும்.

(4) தேவைப்படக்கூடிய அத்தகைய ஒழுங்குமுறை விதிகளை வரைவு செய்து, அவைபற்றி முடிவு செய்வதற்காக, தகுதி வாய்ந்த அந்தந்த அதிகாரஅமைப்புகளுக்கு பணிந்தனுப்பவேண்டியது முதல் துணைவேந்தரின் கடமையாக இருத்தல் வேண்டும். அத்தகைய ஒழுங்குமுறை விதிகள் இயற்றப்பட்டவுடன் ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படுதல் வேண்டும்.

(5) இந்தச் சட்டத்திலும் ஒழுங்குமுறை விதிகளிலும் என்ன அடங்கியிருந்தபோதிலும், மற்றும் அதிகார அமைப்பு ஒன்று உரியவாறு அமைக்கப்படும் காலம் வரையிலும், முதல் துணைவேந்தர், இந்தச் சட்டம் மற்றும் ஒழுங்குமுறை விதிகளின்படி அத்தகைய அதிகார அமைப்பின் அதிகாரங்களைச் செலுத்திவரவும் மற்றும் கடமைகள் எதனையும் ஆற்றி வரவும் தற்காலிகமாக அலுவலர் எவரையும் நியமிக்கலாம் அல்லது குழு எதையும் அமைத்துருவாக்கலாம்.

## அத்தியாயம் X.

### பல்வகை.

**54.** கல்வி மன்றத்தின் மூன்றில் இரண்டு பங்கிற்குக் குறையாத உறுப்பினர்கள், மதிப்புறு பட்டம் அல்லது கல்விச் சிறப்பு ஒன்று, நபர் எவருக்கும் அவர்தம் கருத்தில் அவர் புகழ் வாய்ந்த நிலையை எய்தியதன் காரணமாகவும் சிறப்பான நிலையில் இருப்பதன் காரணமாகவும், அத்தகைய பட்டம் அல்லது கல்விச் சிறப்பினைப் பெறுவதற்குப் பொருத்தமானவராகவும் தகுதியானவராகவும் இருக்கிறார் என்பதன் பேரிலும் வழங்கப்படலாம் என்று பரிந்துரை செய்வார்களாயின், பொதுமன்றமானது, தீர்மானம் ஒன்றின் வாயிலாக, பரிந்துரை செய்யப்பட்ட நபருக்கு அது வழங்கப்படலாம் என முடிவு செய்யலாம். மதிப்புறு பட்டம்.

பட்டத்தினைத் திரும்பப்பெறுதல்.

**55.** (1) பொதுமன்றமானது, செயலாட்சிக் குழுவின் பரிந்துரையின் பேரில், நபர் எவருக்கும் வழங்கப்பட்ட அல்லது அளிக்கப்பட்ட சிறப்பு அல்லது பட்டம் எதனையும், பொது மன்றத்தின் மொத்த உறுப்பினர்களின் பெரும்பான்மையினால் மற்றும் பொது மன்றத்தின் கூட்டத்தில் வந்திருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கிற்கும் குறையாத பெரும்பான்மை ஒன்றினால் இயற்றப்பட்ட தீர்மானம் ஒன்றின் வாயிலாக, அத்தகைய நபர், பொது மன்றத்தின் கருத்தில், ஒழுக்கக் கேட்டினை உள்ளடக்கிய குற்றச் செயல் ஒன்றிற்காக நீதிமன்றம் ஒன்றினால் குற்றவாளி எனத் தீர்ப்பளிக்கப்பட்டிருப்பாராயின் அல்லது அவர் கடும் நடத்தைக் கேடு எனும் குற்றம் புரிந்துள்ளாராயின், திரும்பப் பெறலாம்.

(2) இந்தப் பிரிவின்படி நடவடிக்கை எதுவும், நபர் எவருக்கும் எதிராக எடுக்கப்படுவதற்குக் கருதப்பட்டிருக்கும் நடவடிக்கைக்கு எதிராகக் காரணம் காட்டுவதற்கு அவருக்கு வாய்ப்பு ஒன்று வழங்கப்பட்டிருந்தாலன்றி, எடுக்கப்படுதல் ஆகாது.

(3) பொது மன்றத்தால் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் படியொன்று, தொடர்புடைய நபருக்கு உடனடியாக அனுப்பப்படுதல் வேண்டும்.

(4) பொது மன்றத்தினால் எடுக்கப்பட்ட முடிவினால் குறையுற்ற நபர் எவரும், அத்தகைய தீர்மானம் பெறப்பட்ட தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குள்ளாக வேந்தருக்கு மேல்முறையீடு செய்து கொள்ளலாம்.

(5) அத்தகைய மேல்முறையீட்டின் பேரில், வேந்தரின் முடிவே அறுதியானதாகும்.

ஒழுக்கக் கட்டுப்பாடு.

**56.** (1) இப்பள்ளியின் மாணவர்களுக்கிடையே ஒழுக்கக் கட்டுப்பாட்டைப் பேணிவருவதற்கு இறுதியான பொறுப்புடைய அதிகார அமைப்பாகத் துணை வேந்தர் இருத்தல் வேண்டும். இது குறித்த அவருடைய பணிப்புரைகள், துறைகளின் மற்றும் தங்கும் விடுதிகளின் தலைவர்களால் நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

(2). (1)–ஆம் உட்பிரிவில் என்ன அடங்கியிருந்த போதிலும், தேர்வு எழுதுவதிலிருந்து மாணவர் ஒருவரைத் தடுத்து நிறுத்துதல் அல்லது பள்ளியிலிருந்து அல்லது விடுதியிலிருந்து மாணவர்களை நீக்குதல் என்பதான தண்டனையானது, துணை வேந்தரின் அறிக்கையின் பேரில், செயலாட்சி மன்றத்தால் பரிசீலனை செய்யப்படுதலும், விதிக்கப்படுதலும் வேண்டும்:

**வரம்புரை**: ஆனால், அத்தகைய தண்டனை எதுவும், தொடர்புடைய மாணவருக்கு, அவருக்கு எதிராக எடுக்கப்படுவதற்குக் கருதப்பட்டுள்ள நடவடிக்கைக்கு எதிராகக் காரணம் காட்டுவதற்கு நியாயமான வாய்ப்பு ஒன்று வழங்கப்பட்டிருந்தாலன்றி, விதிக்கப்படுதல் கூடாது.

ஆதரவளிக்கப்பட்ட திட்டங்கள்.

**57.** பள்ளியினால் நிறைவேற்றப்படுவதற்கான திட்டம் ஒன்றிற்கு ஆதரவளிக்கும் அரசு எதனிடமிருந்தும் பல்கலைக்கழக மானிய ஆணையக்குழு அல்லது பிற முகவாண்மைகளிடமிருந்தும் பள்ளியானது நிதியங்களைப் பெறுகிறபோதெல்லாம், இந்தச் சட்டத்தில் அல்லது ஒழுங்கு முறை விதிகளில் என்ன அடங்கியிருந்தபோதிலும்,–

(a) பெறப்பட்ட தொகை, பள்ளியினால், பொதுநிதியத்திலிருந்து தனியாக வைத்துவரப்படுதல் வேண்டும் மற்றும் அத்திட்டத்தின் நோக்கத்திற்காக மட்டுமே பயன்படுத்தப்படுதல் வேண்டும்; மற்றும்

(b) திட்டத்தை நிறைவேற்றுவதற்குத் தேவைப்படும் பணியாளர்களை, ஆதரவளிக்கும் நிறுவனத்தால் விதிக்கப்பட்ட வரையறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு இணங்கிய வகையிலான ஆட்சேர்ப்பு மூலம் சேர்த்தல் வேண்டும்.

தற்செயல் காலியிடங்களை நிரப்புதல்.

**58.** பள்ளியின் அதிகார அமைப்பு எதனின் (*பதவி வழி* உறுப்பினர்கள் அல்லாத பிற) உறுப்பினர்களிடையே எழும் தற்செயல் காலியிடங்கள் அனைத்தும், எந்த உறுப்பினருடைய பதவியிடம் காலியாக ஆகியுள்ளதோ அந்த உறுப்பினரைப் பெயர்குறித்து நியமனம் செய்த அல்லது தேர்ந்தெடுத்த நபரால் அல்லது அமைப்பினால் எவ்வளவு விரைவில் கூடுமோ அவ்வளவு விரைவில், நிரப்பப்படுதல் வேண்டும்; மற்றும் தற்செயல் காலியிடமொன்றுக்கு பெயர் குறித்து

நியமனம் செய்யப்பட்டவர் அல்லது தேர்ந்தெடுக்கப்பட்டவர், எவருடைய பதவியிடத்தை அவர் நிரப்புகிறாரோ, அவர் ஓர் உறுப்பினராக இருந்திருக்கக்கூடிய கால அளவின் எஞ்சிய பகுதிக்கு அத்தகைய அதிகார அமைப்பின் உறுப்பினராக இருப்பார்:

**முதலாம் வரம்புரை:** ஆனால், இப்பள்ளியின் அதிகாரஅமைப்பு எதற்கும் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களுக்கு இடையே காலக்கழிவினால் எழும் காலியிடங்கள், அந்தக் காலியிடங்கள் ஏற்படும் தேதியிலிருந்து இரண்டு மாதங்களுக்கு முந்தியதாக இல்லாத, துணை வேந்தர் பொருத்தமெனக் கருதுகிற அத்தகைய தேதியன்று, நடைபெற வேண்டுமென அவரால் நிர்ணயிக்கப்படக்கூடிய தேர்தல் மூலம் நிரப்பப்படலாம்:

**இரண்டாம் வரம்புரை:** மேலும், இப்பள்ளியின் அதிகார அமைப்பு எதனின் உறுப்பினரின் பதவிக்காலம் முடிவடையும் தேதிக்கு முந்திய ஆறு மாதங்களுக்குள், தற்செயல் காலியிடம் எதுவும் எழுமாயின், அத்தகைய காலியிடம் நிரப்பப்படுதல் கூடாது.

இப்பள்ளியின் அதிகார அமைப்புகளின் நடவடிக்கைகள் காலியிடங்கள் இருப்பதன் காரணமாக செல்லாததவையாக ஆக்கப்படுதல் ஆகாது எனல்.

**59.** இப்பள்ளியின் அதிகார அமைப்பு எதனின் செயல் அல்லது நடவடிக்கை எதுவும், காலியிடம் எதுவும் இருக்கின்ற அல்லது பள்ளியின் அத்தகைய அதிகார அமைப்பு எதனின் உறுப்பினர் ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டதில் அல்லது பெயர் குறித்து நியமனம் செய்யப்பட்டதில் குறைபாடு அல்லது முறைகேடு எதுவும் இருக்கின்ற, அல்லது நேர்வுக்குள்ள தகுதிகளைப் பாதிக்காத வகையில், அத்தகைய செயல் அல்லது நடவடிக்கைகளில் குறைபாடு அல்லது முறைகேடு எதுவும் இருக்கின்ற காரணத்தினால் மட்டுமே, அல்லது பள்ளியின் அதிகார அமைப்பானது இந்தச் சட்டம் கோருகின்றபடி அத்தகைய இடைவெளிகளில் கூடவில்லை என்கின்ற காரணத்தால் மட்டுமே, செல்லாததாக ஆக்கப்படுதல் கூடாது.

பள்ளியின் உறுப்பினர் பதவியிலிருந்து நீக்கப்படுதல்.

**60. (1)** செயலாட்சி மன்றமானது,–

(a) செயலாட்சி மன்றமானது உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்குக்கு குறையாதவர்களால், செய்யப்படும் பரிந்துரையின் பேரில், இதன்பொருட்டு செய்யப்படும் எழுத்து மூலமான ஆணையொன்றின் வாயிலாக சட்டப் பட்டதாரிகள் பதிவேட்டிலிருந்து நபரெவரின் பெயரையும் நீக்கலாம்; அல்லது

(b) இப்பள்ளியின் அதிகார அமைப்பு எதனின் உறுப்பினர் எவரும், செயலாட்சி மன்றத்தின் கருத்தின்படி, ஒழுக்கக்கேட்டை உள்ளடக்கியதாக உள்ள ஒரு குற்றச்செயலுக்காக நீதிமன்றம் ஒன்றினால் குற்றவாளி எனத் தீர்ப்பளிக்கப்பட்டிருப்பாராயின், அல்லது கடுந் தவறான நடத்தை எனும் குற்றத்தை இழைத்திருக்கும் குற்றவாளியாக இருப்பாராயின், செயலாட்சி மன்றத்தின் மொத்த உறுப்பினர்களின் பெரும்பான்மையினராலும் மற்றும் கூட்டத்திற்கு வருகைதந்து வாக்களிக்கும் செயலாட்சி மன்ற உறுப்பினர்களின், மூன்றில் இரண்டு பங்குக்குக் குறையாத பெரும்பான்மையினாலும் நிறைவேற்றப்பட்ட ஒரு தீர்மானத்தின் மூலம், இதன் பொருட்டுப் பிறப்பிக்கப்பட்ட எழுத்து மூலமான ஆணையொன்றின் வாயிலாக, அத்தகைய நபரைப் பள்ளி அதிகார அமைப்பு எதனின் உறுப்பினர் பதவியில் இருந்தும் செயலாட்சி மன்றமானது நீக்கலாம்; மற்றும் அதே காரணத்திற்காக பள்ளியால் அந்த நபருக்கு அளிக்கப்பட்ட அல்லது வழங்கப்பட்ட பட்டம் அல்லது கல்விச் சிறப்பு எதனையும் நீக்கித் திரும்பப்பெறலாம்.

**(2)** நபர் எவரும், மனச்சீர்கேடுற்றவராக ஆகியிருக்கின்றாரெனில், அல்லது அவர் நொடிப்புநிலை அடைந்த ஒருவராக நீதிமுறையில் தீர்மானிக்கப்படுவதற்கு விண்ணப்பித்துக் கொண்டிருந்தால் அல்லது நொடிப்புநிலை அடைந்த ஒருவராக நீதிமுறையில் தீர்மானிக்கப்பட்டிருந்தால், இதன்பொருட்டுப் பிறப்பிக்கப்பட்ட எழுத்து மூலமான ஆணையொன்றின் வாயிலாக, செயலாட்சி மன்றமானது பள்ளி அதிகார அமைப்பு எதனின் உறுப்பினர் பதவியிலிருந்தும் அவரை நீக்கலாம்;

**(3)** நபர் எவர் மீதும் எடுக்க கருதியுள்ள நடவடிக்கைக்கு எதிராகக் காரணம் காட்டுவதற்கு, அவருக்கு நியாயமான வாய்ப்பொன்று கொடுக்கப்பட்டிருந்தாலன்றி, இந்தப் பிரிவின்படி நடவடிக்கை எதுவும் அவர்மீது எடுக்கப்படுதல் ஆகாது.

**(4). (1)**–ஆம் உட்பிரிவு அல்லது, நேர்விற்கேற்ப, **(2)**–ஆம் உட்பிரிவின்படி பிறப்பிக்கப்பட்ட ஆணை ஒவ்வொன்றின் படியொன்று, அது அவ்வாறு பிறப்பிக்கப்பட்டதன் பின்னர், கூடிய விரைவில், வகுத்துரைக்கப்பட்டுள்ள முறையில் தொடர்புடைய நபருக்கு அனுப்பித் தெரிவிக்கப்படுதல் வேண்டும்.

பள்ளி அதிகார அமைப்புகளுக்கும் பிற அமைப்புகளுக்கும் தேர்ந்தெடுத்தல் அல்லது பெயர் குறித்து நியமனம் செய்தல் பற்றிய பூசல்கள்

**61.** இப்பள்ளியின் அதிகார அமைப்பு எதனின் அல்லது பள்ளியின் அமைப்பு எதனின் உறுப்பினர் ஒருவராக எவரும், உரியவாறு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளாரா அல்லது பெயர்குறித்து நியமனம் செய்யப்பட்டுள்ளாரா அல்லது உறுப்பினராக இருப்பதற்கு உரிமைத் தகுதியுடையவராக இருக்கிறாரா என்பது குறித்து பிரச்சினை எதுவும் எழுமாயின், அப்பிரச்சினையானது, வேந்தருக்குக் குறித்தனுப்பப்படுதல் வேண்டும்; அதன்மீதான அவருடைய முடிவே அறுதியானதாகும்.

தகவல் பெறுவதற்கான அதிகாரம்.

**62.** இந்தச் சட்டத்திலோ அல்லது அப்போதைக்கு நடைமுறையிலுள்ள பிற சட்டம் எதிலுமோ என்ன அடங்கியிருந்தபோதிலும், அரசு எழுத்து மூலமான ஆணையின் வாயிலாக, பள்ளியின் அலுவல்கள் தொடர்பான பொருட்பாடு எதனையும் பற்றிய தகவல் எதனையும் பள்ளியிடமிருந்து கேட்டுப்பெறலாம்; மற்றும் பள்ளியானது, அத்தகைய தகவல் தன்னிடம் இருக்குமாயின், அத்தகைய தகவலை நியாயமானதொரு கால அளவிற்குள் அரசுக்கு அளித்தல் வேண்டும்:

**வரம்புரை:–** ஆனால், இப்பள்ளி, மந்தணமானதெனக் கருதுகிற தகவலைப் பொறுத்த அளவில், இப்பள்ளியானது, அதனை வேந்தரின் முன்பு அவர்தம் முடிவிற்காக வைக்கலாம்.

நூலகர்.

**63. (1)** நூலகர், இந்நோக்கத்திற்காக அமைக்கப்படும் தெரிவுக் குழுவின் பரிந்துரையின்பேரில் வகுத்துரைக்கப்படக்கூடிய அத்தகைய கால அளவுக்கும், அத்தகைய வரையறைகள் மற்றும் நிபந்தனைகளின்பேரிலும், செயலாட்சி மன்றத்தால் நியமிக்கப்பட்ட, பள்ளியின் ஒரு முழுநேர அலுவலராக இருந்து வருவார்.

**(2)** நூலகர், செயலாட்சி மன்றத்தால் அவருக்குக் குறித்தளிக்கப்படக்கூடிய அத்தகைய அதிகாரங்களைச் செலுத்தி வருவதோடு அத்தகைய கடமைகளையும் ஆற்றிவருவார்.

நியமிப்பதற்கான தனி முறை.

**64. (1)** உயர்கல்விச் சிறப்புகள் மற்றும் தொழில் முறையில் சாதனைகளைச் செய்துள்ள நபர் ஒருவரை, தான் பொருத்தமெனக் கருதும் வரையறைகள் மற்றும் நிபந்தனைகளின் பேரில் பள்ளியின் பேராசிரியர் பதவியினை ஏற்றுக்கொள்ளுமாறு செயலாட்சி மன்றமானது அழைக்கலாம்; மற்றும் அந்நபர் அவ்வாறு ஏற்றுக்கொண்டதன்பேரில் அவரை அப்பதவியில் நியமிக்கலாம்.

**(2)** செயலாட்சி மன்றமானது, பிற பள்ளி அல்லது நிறுவனம் எதிலும் பணியாற்றும் ஆசிரியரொருவரை அல்லது கல்வி சார்ந்த பணியாளர் தொகுதியின் பிற உறுப்பினர் எவரையும் வகுத்துரைக்கப்பட்ட முறையில், கூட்டுச் செயற்திட்டமொன்றை மேற்கொள்வதற்காக நியமிக்கலாம்.

இடர்பாடுகளை நீக்குவதற்கான அதிகாரம்.

**65. (1)** இந்தச் சட்டம் வெளியிடப்படும் தேதிக்குப் பின்னர், பள்ளியின் அதிகார அமைப்பு எதனையும் முதன்முறையாக அமைத்துருவாக்குதல் அல்லது மாற்றி அமைத்துருவாக்குதல் குறித்தோ, அல்லது மற்றப்படி இந்தச் சட்டத்தின் வகைமுறைகளை செயற்படுத்துவதிலோ இடர்ப்பாடு எதுவும் எழுமாயின், அரசு, அறிவிக்கை வாயிலாக இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு முரணாக இல்லாத, அந்த இடர்ப்பாட்டினை நீக்குவதற்குத் தேவையானதாகவோ அல்லது உகந்ததாகவோ தமக்குத் தோன்றக்கூடிய அத்தகைய வகைமுறையினைச் செய்யலாம்:

**வரம்புரை:–** ஆனால், அத்தகைய அறிவிக்கை எதுவும் **3–**ஆம் பிரிவின்படி பள்ளி நிறுவி அமைக்கப்பட்ட தேதியிலிருந்து இரண்டாண்டுகள் முடிவடைந்ததற்குப் பின்பு, பிறப்பிக்கப்படுதல் கூடாது.

**(2).(1)–**ஆம் உட்பிரிவின்படி அல்லது இந்தச் சட்டத்தின் பிற வகைமுறைகள் எதனின்படியும் பிறப்பிக்கப்பட்ட அறிவிக்கை ஒவ்வொன்றும், அது பிறப்பிக்கப்பட்ட பின்பு, கூடிய விரைவில் சட்டமன்றப்பேரவையின் முன்பு வைக்கப்படுதல் வேண்டும். மற்றும் அது அவ்வாறு வைக்கப்படும் கூட்டத்தொடர் அல்லது அடுத்தக் கூட்டத்தொடர் முடிவடைவதற்கு முன்பு அத்தகைய அறிவிக்கை எதிலும் மாற்றம் எதனையும் சட்டமன்றப்பேரவையானது செய்யுமாயின் அல்லது அந்த அறிவிக்கை பிறப்பிக்கப்படுதல் ஆகாது எனச் சட்டமன்றப்பேரவையானது முடிவு செய்யுமாயின்,

அந்த அறிவிக்கையானது, அதன்பின்பு அவ்வாறு மாற்றியமைக்கப்பட்ட வடிவத்தில் மட்டுமே செயல்வடிவம் பெறுதல் வேண்டும் அல்லது நேர்விற்கேற்ப, செயல்வடிவம் பெறாமலே போகும்; எனினும், அவ்வாறு மாற்றியமைப்பது அல்லது நீக்கம் செய்வதெதுவும் அறிவிக்கையின்படி முன்னதாகச் செய்யப்பட்ட எதனின் செல்லுந்தன்மைக்கும் குந்தகமின்றி இருத்தல் வேண்டும்.

**66.** அரசானது, அவ்வப்போது இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்குச் செயல் வடிவம் கொடுப்பதற்காக, தான் தக்கதெனக் கருதுகிற அத்தகைய பணிப்புரைகளை பள்ளிக்குப் பிறப்பிக்கலாம்; மற்றும் அத்தகைய பணிப்புரைகளுக்கு இணங்கி நடப்பது இப்பள்ளியின் கடமையாக இருத்தல் வேண்டும்.

பணிப்புரைகள் வழங்க அரசுக்கு உள்ள அதிகாரம்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**கோ.ஜெயசந்திரன்,**
*அரசுச் செயலாளர்,*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**ச.சந்திரசேகரன்,**
*இயக்குநர்,*
*தமிழ்ப் பிரிவு, சட்டத் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.